Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (28-6-66) இதழ் 141

பராபவ ஆனி 14 ரபி அவ் 8 செவ்வாய்க்கிழமை

## சுகர்ணோ பதவிக்கு எதிர்ப்பு வலுக்கிறது

### நசூதியானை உப ஜனாதிபதியாக்குமாறு கோரிக்கை

ஜாகர்த்தா, ஜூன் 30

இந்தோனேஷியாவில் அதிபர் சுகர்ணோவின் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. சுகர்ணோ, ஜனாதிபதிப் பதவியில் தொடர்ந்திருப்பார் என்று அறிவிக்கப்பட்ட போதிலும், மாணவர்களின் எதிர்ப்பு இப்பொழுது வலுப்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

சுகர்ணோவை ஜனாதிபதி பதவியிலிருந்து அகற்றிவிட்டு உதவி ஜனாதிபதியாக ஜெனரல் நசூதியானை நியமிக்கவேண்டும் என்று மாணவர்கள் கோரியுள்ளனர்.

இதற்கிடையே ஆகஸ்ட் மாதம் 17-ந் திகதிக்கு முன்னர், முன்னாள் இந்தோனேஷிய மந்திரிகள் மீதான வழக்கு விசாரணை நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# மந்திரி சபையில் மாறுதலா?

## தமிழரசும் மேலும் பதவி ஏற்குமா?

### நாகநாதன் உரைக்கு அரசியல் வியாக்கியானம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**தேசீய அரசாங்கத்தின் மந்திரிசபையில் விரைவில் மாறுதல் ஏற்படவிருக்கிறதா? மாறுதல் ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் நாட்டின் நலனையும் முன்னேற்றத்தையும் கருதியும் தமிழ் பேசும் மக்களின் நலனைக் கருதியும் தமிழரசுக் கட்சி இன்னும் சில மந்திரிப் பதவிகளையும் ஏற்றுக்கொள்ளவிருக்கிறதா?**

கல்முனை கடற்கரை மைதானத்தில் தமிழரசுக் கட்சியின் தேசிய மகாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியாக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் திரு டட்லி சேனநாயகாவை வரவேற்று கட்சியின் புதிய தலைவர் டாக்டர் இ. மு. வி நாகநாதன் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்ட ஒரு வார்த்தையை வைத்து அரசியல் அவதானிகள் மேற்கண்ட கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

''நீங்கள் மந்திரிசபை அமைத்தபோது நாங்கள் உங்களுக்கு எங்களது ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்கினோம். ஆனாலும் மந்திரிப்பதவி ஒன்றை ஏற்கத் தயங்கினோம். இன்றுள்ள நிலையில் நாட்டை முன்னேற்றுவதற்கு உங்களுக்குத் திறமையும் உழைப்புமுள்ளவர்களே தேவைப்படுகிறார்கள். நாங்கள் எங்கள் திறமையையும் உழைப்பையும் அளிக்கத் தயாராக இருக்கிறோம்'' என்று டாக்டர் நாகநாதன், பிரதமரை வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டதைத்தான் அரசியல் அவதானிகள் மேற்கண்டவாறு வியாக்கியானம் செய்கின்றனர்.

இதேசமயம் தமிழ்பேசும் மக்கள் தேசிய அரசாங்கத்துக்குத் தங்கள் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்கத் தயாராக இருக்கிறார்களென்பதையே டாக்டர் நாகநாதன் அவ்விதம் கூறியிருக்கக் கூடுமென்றும் அவர்கள் கருதுகின்றனர்.

அசைஸ் விசாரணை

## ஆனைக்கோட்டை கொலைவழக்கு: நாளை விசாரணை

யாழ்ப்பாணம், செவ்.

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நேற்று ஆரம்பமாகவிருந்த ஆனைக்கோட்டை கூழாவடி கொலை வழக்கு விசாரணைகள் நாளை புதன்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக்கொலை வழக்கு நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா முன்னிலையில் நேற்றுக்காலை விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது ஜூரிகள் இல்லாமல் ஆரம்பவிசாரணை நடைபெற்ற பின்னர் புதன்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கில் ஆனைக்கோட்டை கூழாவடியைச் சேர்ந்த தமயந்தி இராஜமாத்தாண்டனை பொல்லால் அடித்துக் கொலை செய்ததாக சந்திரவேலு காளிமுத்து என்பவர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எதிர்தரப்பில் அரசாங்கத்தின் சார்பாக வழக்கறிஞர் திரு. ஆர். ஆர். கோபாலரத்தினம்ஆஜரானார். முடிக்குரிய தரப்பில் திரு. டி. கே. டி. எஸ். அபயநாயக்கா ஆஜரானார்.

## ஜூலை 1-ல் கொழும்புத்திட்ட தினம்

கொழும்பு, திங்கள்

கொழும்புத்திட்ட தினத்தை அடுத்த மாதம் முதலாம் திகதி கொண்டாடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்புத்திட்ட தினத்தைக் குறிக்கும் முகமாக சில விசேஷ நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன. கொழும்புத் திட்டத்தின் நோக்கங்கள், வெற்றிகள் ஆகியவற்றைக் குறிக்கும் முகமாக திரைப்படமொன்று திரையிடுவது. கருத்தரங்கம், புகைப்படக் கண்காட்சி ஆகியவற்றை நடத்துவது போன்றவிசேஷ நிகழ்ச்சிகளுக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

புகைப்படக் கண்காட்சியை இம்மாதம் 30-ம்திகதி பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா ஆரம்பித்து வைப்பார். இக்கண் காட்சி அடுத்தமாதம் 3-ம் திகதி வரை பொதுமக்களுக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

## ஆஸ்பத்திரியில் மருந்தில்லாததால் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை

### மரணவிசாரணை அதிகாரி கண்டனம்

யாழ்ப்பாணம், செவ்

''உயிரைக் காப்பாற்ற கூடிய அவசிய, அவசரமருந்துகள் கூட அரசாங்க ஆஸ்பத்திரிகளில் இல்லாமல் இருப்பது இப்பொழுது சகஜமாகிவிட்டது இதனால் காப்பாற்றக் கூடியபலஉயிர்களைக் கூட இழந்து விடவேண்டியுள்ளது என்பதை அரசாங்கம் உணரவேண்டும்'' என்று யாழ்ப்பாணம் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் குருநாகலையைச் சேர்ந்த எஸ். எம் சாகுல் ஹமீத் என்பவரின் மரணவிசாரணையின் போது குறிப்பிட்டார்.

மரண மானவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் அவசர ஊசி மருந்தொன்று (பொப்ஜார் ஊசி மருந்து ஏற்றும்படி டாக்டர் விடுத்திருந்தும் ஆஸ்பத்திரியில் அந்த மருந்துஇல்லாமையால் அவர் வார்டில் அனுமதிக்கப்படு முன் இறந்தார் என்பது மரண விசாரணையின் போது தெரியவந்தது.

குருநாகலை தேங்காய்வியாபாரியான சாகுல் ஹமீத் [illegible] தேங்காய் விற்றுக் கொண்டிருக்

(5-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மொழிச்சட்ட விதிகளின் அமுல்

### நீதி அமைச்சரை மீண்டும் நாகநாதன் சந்திப்பார்

யாழ்ப்பாணம், செவ்.

தமிழ்மொழிச் சட்ட விசேஷ விதிகளை விரைவில் அமுல் நடத்துவது சம்பந்தமாக துரித நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தும் பொருட்டும் தமிழ்மொழிச் சட்ட விதிகளை அமுல் நடத்துவதற்குப் பொறுப்பான நீதிஅமைச்சர் திரு. விஜயமானேயை தமிழரசுக் கட்சித்தலைவர் டாக்டர் இ. மு. வி, நாகநாதன் விரைவில் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

தமிழ்மொழிச் சட்ட விதிகள் அமுல் சம்பந்தமாக சில வாரங்களுக்குமுன் தமிழரசுத் தலைவர் திரு எஸ். ஜே வி செல்வநாயகம் டாக்டர் நாகநாதன் ஆகியோர் நீதி அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அச்சமயம் தமிழ் மொழிச்சட்ட விதிகளை அமுல நடத்துவதற்குப் பொறுப்பாக தனிப்பிரிவு ஒன்றை தமிழர் ஒருவரை ஆணையாளராக அல்லது உதவி ஆணையாளராக நியமித்து அவரிடம் ஒப்படைக்கவேண்டுமென்று கேட்டதாகவும் ஆனால் இதற்கு நீதி அமைச்சர் மறுத்துவிட்டதாகவும் தெரியவருகிறது.

ஒரு தமிழர் உட்பட மூன்று நிரந்தரக்காரியதரிசிகளைக் கொண்ட குழுவொன்றை தமிழ்ச்சட்ட விதிகளை அமுல் நடத்துவதற்குப் பொறுப்பாக நியமிக்கவேண்டுமென்று தமிழரசுக்கட்சி பின்னர் மாற்றுயோசனையொன்றை நீதியமைச்சரிடம் தெரிவித்தது. இந்த யோசனை சம்பந்தமாக நீதியமைச்சர் என்ன நடவடிக்கைஎடுக்க உத்தேசித்துள்ளாரென்பதைத் தெரிந்து கொள்ளவும் தமிழ்மொழிச் சட்ட அமுல் சம்பந்தமாக தமிழரசுக்கட்சியின் பத்தாவது தேசிய மகாநாடு நிறைவேற்றிய தீர்மானம் பற்றி எடுத்துக் கூறவும் டாக்டர் நாகநாதன் விரைவில் நீதியமைச்சரைச் சந்திக்க இருக்கிறார்.

இதேசமயம் அடுத்த வாரம் மந்திரிசபை கூடும் பொழுது மந்திரிசபைக்கூட்டத்திலும் இதுபற்றி மந்திரி திருச்செல்வம் பேசவிருக்கிறார்.

தெதுருஓயா கொலை வழக்கு

## ''மணல் மீது இரத்தக் கறைகள் காணப்பட்டன'

### மாணவரின் சாட்சியம்

குளியாப்பிட்டி, திங்கள்

தெதுருஓயா ஆற்றுப் படுக்கையின் சில இடங்களில் இரத்தக் கறைகள் காணப்படுவதாக நண்பன் ஒருவன் என்னிடம் கூறியதைத் தொடர்ந்து நான் எனது வீட்டுக்கு அருகாமையிலிருந்த விக்கிரமசிங்கா என்பவரிடம் விபரத்தைச்சொல்லி நானும் அவரும் அங்கு சென்றோம். ஆற்றுப் படுக்கையின் ஒரு இடத்தில் இரத்தக் கறைகள் அதிகமாகக்காணப்பட்டது. அந்த இடம் ஒரு மேடாகத் தோற்றமளிக்கவே விக்கிரமசிங்கா அதனைத் தோண்டினார். அப்பொழுது மனிதக்கையொன்று முதலில் தென்பட்டது.

தெதுருஓயா கொலை வழக்கு நேற்று குளியாப்பிட்டி மேலதிகமாஜிஸ்டிரேட் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபொழுது பதினேழு வயதுள்ள பாடசாலை மாணவன் பி. தர்மசேன சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் அடையாளம் கண்டுபிடிக்கமுடியாத ஒரு பெண்ணை கடந்த மார்ச் மாதம் 19-ம் திகதி கொலை செய்ததாக டபிள்யு. ஏ. ஜெஸ்டர் பெரேரா என்பவர் மீது குற்றம்சுமத்தப் பட்டுள்ளது.

எம் ஏ சோமதாசா (23 வயது) என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ''கார்களை கழுவுவதுதான் எனது தொழில். எனக்கு எதிரியை நன்றாகத் தெரியும். மாரிச் மாதம் 20-ந்

(5-ம் பக்கம் பார்க்க)

## கிரிக்கெட் டெஸ்ட்

### இருவர் அகற்றப்பட்டனர்

லண்டன், ஜூன் 27

முப்பதாம் திகதி வியாழக்கிழமை நோட்டிப்ஹாமில் ஆரம்பமாகவிருக்கும் இங்கிலாந்து - மேற்கிந்திய மூன்றாவது கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து கோஷ்டியில் சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன.

பந்தெறி வீரர்களான டிட்மஸ், ஜோன் ஆகிய இருவரும் டெஸ்ட் கிரிக்கெட் கோஷ்டியிலிருந்து அகற்றப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

நெசவுத் தறிகள்

9 நெசவுத் தறிகள் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: லெட்சுமி மரக்காலை, ஊர்காவற்றுறை, ஏ. பசுபதி. 596

சப்ளையர்

சைக்கிள் ஓடத் தெரிந்த சப்ளையர் தேவை. வேதனம் மாதம் ஒன்றுக்கு ரூபா 50/-. பிணைப்பணம் 250/- ரூபா நேரில் வரவும். S A. இராஜதுரை, நம். 53, தண்ணீர் ராங்க் ரோட், நக்கிள மேசன், குருநகர், யாழ்ப்பாணம். 599

ஆவணி மாதம் தொடக்கம் நாம் வெளியிட இருக்கும் ''வளர்மதி'' மாதப் பத்திரிகைக்கு 1000 ரூபா முதலிடு செய்யக்கூடிய பங்காளி தேவை. உடனே கடித மூலம் தொடர்புகொள்ளவும். S. அலோசியஸ், மே/பா. க. தில்லைநாயகம், பிரதானவீதி, வவுனியா. 597

### விற்பனைக்கு

காணி

நீராவியடியில் பிறவுண் ரோட் நாவலர்வீதி சந்திக்கு அண்மையில் மூன்றரைப் பரப்பு நிலம் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு S.சோமசுந்தரம், இல்9, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். 701

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சைபெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## சைவமகாஜன . .

(7-ம்பக்கத் தொடர்ச்சி)

கேஸ்வரி, சி விசயராணி, வி யோகேஸ்வரி.

100 மீற்றர் மத்தியபிரிவு: பெண்கள் பொ செல்வராணி, சு புஷ்பராணி, மு பரமேஸ்வரி. 150 மீற்றர் எஸ் இராஜேஸ்வரி, து இராசலட்சுமி.

4 X 100 அஞ்சல் ஆனைக்கோட்டை ரோ க, இசை ம வி, அ தி வி.

80 யார் கீழ்ப்பிரிவு: பெண் கு அம்பிகை, ச விஜயா, எம் மகேஸ்வரி.

100 யார் கீழ்ப்பிரிவு: து இராசலட்சுமி, செ கலாநிதி.

4 X 100 அஞ்சல்: இசை ம, சு வ த க பா, ஆ பா சு, வித்தியாசாலை.

### சாதனை வீரர்கள்

மேற்பிரிவு: இ சின்னராசா, இசை ம வி. மத்தியபிரிவு: இ அரியரத்தினம், இசை ம வி. கீழ்ப்பிரிவு: சி பாலச்சந்திரன், சு வ த க பா மேற்பிரிவு: பெண் சி விசயராணி, சு தி வி. மத்தியபிரிவு: பெண் பொ செல்வராணி, நாகேஸ்வர வித்தியாசாலை. கீழ்ப்பிரிவு: பெண் கு அம்பிகை, இசை ம வி.


REGAL—JAFFNA
NOW SHOWING
Margaret Rutherford
in
MURDER
MOST FOUL

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6 30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
தாய் சொல்லை தட்டாதே

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
ஆனந்தன் - ராஜஸ்ரீ
நடித்த
செங்கமலத் தீவு

29 புதன் முதல்
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
ஜெயலலிதா — ஸ்ரீகாந்த்
ஆஷா, நிர்மலா
மற்றும் பலர் நடிக்கும்
“வெண்ணிற ஆடை”

கடைசி வாரம்
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (அம்பாறை)
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடிக்கும்
தெய்வத்தாய்


# தேர்தல் எதிரொலி!

## மந்திகையில் நிகழ்ந்த கைகலப்பில் சிலர் காயம்

உடுப்பிட்டி, திங்கள்

அண்மையில் நடைபெற்ற புலோலி கி. ச. தேர்தல் எதிரொலியின் காரணமாக மந்திகையில் நடைபெற்று வந்த சர்ச்சைகள் கைகலப்பாக மாறி, அடிதடிச் சண்டை துப்பாக்கிப்பிரயோகம்செய்யும் அளவுக்கு வளர்ந்துவிட்டது! தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் தேர்தலில் பங்குபற்றியது காரணமாக ஏற்பட்ட இச்சண்டையினுல் பல கொட்டில்கள் தீக்கிரையாகின என்றும் தெரிய வருகிறது.

இருதரப்பினரிடையே துப்பாக்கிப்பிரயோகம் நிகழ்ந்ததின் காரணமாகப் பலர் காயமடைந்தனர். இருவர் அபாயகரமான நிலையில் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிறுகாயமுற்றோர் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள் சுகமடைந்து வருவதாக கூறப்பட்டது.

## கலைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணய், செவ்.

வட்டுக்கோட்டைக் கலைக் கழக நான்காவது ஆண்டு விழாவையொட்டி வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள மாணவரிடையே நடைபெற்ற கலைப்போட்டிகளின் பெறுபேறுகள் வருமாறு:

**இசைப் போட்டி**

மேற்பிரிவு: அ சிதம்பரேஸ்வரி (வ கலை க), ந செல்வராணி (வ கலை க), தெ இரத்தினேஸ்வரி (வ கலை க)

இடைப்பிரிவு: ந பேபி சரோஜா (யாழ்ப்பாணக்கல்லூரி), எஸ் விஜயலட்சுமி (விக்ரோறியாக் கல்லூரி), ஆ கனகநாயகி (யாழ்ப்பாணக்கல்லூரி)

கீழ்ப்பிரிவு: சி தில்லைத்தேவி (வ கலை க), ந சண்முகதாஸ் (யாழ்ப்பாணக்கல்லூரி), செ. சிவபாலன் (காரைநகர் நீலிப்பந்தனை அம்பாள் சனசமூகநிலையம்)

**பேச்சுப்போட்டி**

இடைப்பிரிவு: க ஸ்ரீகாந்தா (காரைநகர் நீலி அ ச நி) கே தேவகிராணி (விக்ரோறியாக் கல்லூரி) மு சகுந்தலா (வ கலை க)

கீழ்ப்பிரிவு: என் சகுந்தலை (விக்ரோறியாக் கல்லூரி), சி செல்வராணி (சித்தங்கேணி மாதர் சங்கம்), நி நிர்மலநாயகி (சி மா ச), கே ஜெயராணி (விக்ரோறியாக் கல்லூரி)




### கொழும்பு

செவ்வாய் 28 - 6 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல் வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 இசை மெட்டு.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 7-15 யுனெஸ்கோ [illegible] நிகழ்ச்சி, 9-15 நாதஸ்வரம், 10-00 நேயர்விரும்.

## பட்டினசபையின் கூட்டம்

வல்வெட்டித்துறை, திங்

வல்வெட்டித்துறை பட்டின சபையின் மாதாந்தக் கூட்டம் புதிய தலைவர் திரு. வி. இரத்தினவடிவேலு தலைமையில் நடைபெற்றது.

பின்வரும் தீர்மானம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

பட்டினசபையினுல் வாங்கப்பட இருக்கும் 32,505 ரூபா பெறுமதியான அசுத்தங்களை ஏற்றிச் செல்வதற்கான டிருக்டருக்கான கேள்விப்பத்திரத்தை அங்கீகரிப்பதென்றும் அதற்காக அங்கீகரிக்கப்பட்ட 20,000 ரூ. கடனைவிடமிகுதிப்பணமான 12,505 ரூபாவையும் உள்ளூராட்சி கடன் அபிவிருத்திப் பணத்திலிருந்து பெற்றுத் தருமாறு பருத்தித்துறை எம்- பி, திரு க. துரைரத்தினத்தையும், உள்ளூராட்சி உதவி ஆணையாளரையும் கேட்டுக்கொள்வதென்றுதீர்மானிக்கப்பட்டது.

## ‘திருவாசகம் எனும் ஞானச் செல்வம்’

கிளிநொச்சி. திங்கள்

''நற்கருப்பஞ்சாற்றினிலே — தேன்கலந்து பால் கலந்து — செழுங்கனித்தீஞ் சுவைகலந்து—ஊன் கலந்து —உயிர்கலந்து — உவட்டாமல் இனிக்குஞ் சுவையுடையது திருவாசகம். இத்திருவாசகம் ஒப்பற்ற வேத உபநிடதங்களின் சாரமாகி உன்னுந்தோறும் உருக்கும் தன்மையுடையது. பிறவிப் பிணியை நீக்கிப் பேரின்பப் பெருவாழ்வை நல்க வல்லது. இத்திருவாசகம் சைவ சமயத்தவர்கட்கு கிடைத்த ஞானச் செல்வமாகும. இச்செல்வத்தைப் பெற்ற நாம் அதன் பெருமையை நன்குணர்ந்து அதனை நாள்தோறும் பொருளுணர்ந்து ஓதும் பழக்கத்தை இளம் வயதிலிருந்தே ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.''

இவ்வாறு கிளிநொச்சி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில்தவத்திரு வடிவேல் சாமியாரின் தலைமையில் நடைபெற்ற மணிவாசகர் விழாவின்போது திருமதி ப. மகாலிங்கசிவம் ஆசிரியை பேசினுர்.

மேற்படி பாடசாலை ஆசிரியை திருமதி பூ. சண்முகநாதன் மாணவர்களுக்கு உதிர்ந்த பிட்டு வழங்கினுர்கள். பின்னர் மாணவர்கள் பாடசாலைக்கருகில் உள்ள ஆதாரக்கல்விக் குருகுல சமையலக மண்டபத்திற்கு மண்கொட்டினுர்கள். மாணவர்கள் மண்சுமக்கும் பணியில் ஈடுபட்டனர்.

## அன்னதானம்

யாழ்ப்பாணம், செவ்

புங்குடுதீவு மேற்கு குறிகாட்டுவான் மனேன்மணி அம்மன் ஆலயத்தில் நடைபெற்றுவரும் உற்சவங்களில் 8ந் திருவிழாவான இன்று முதல் தீர்த்தோற்சவம் வரையான மூன்று நாட்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க அன்னதான சபையார் ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

## ‘சமயநம்பிக்கையுடன் சமுதாயம் வேண்டும்’’

மீசாலை, திங்கள்

''சமய நம்பிக்கையுடைய சமுதாயத்தை உருவாக்குவதற்கு இத்தகைய குருபூசைகள் மிகவும் உபயோகமாக இருக்கும். மணிவாசகரின் மாண்பை உணர்ந்து திருவாசகத்தை ''சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து'' பாராயணஞ்செய்து வந்தால் எங்கள் மத்தியில் ஞானிகள் தோன்றுவர். சமயச் சொற்பொழிவுகளின்றி உலகியல் மணமே வாழ்வில் செறிபுமேயாகல் ஞான உணர்வுடன் தப்பித் தவறிப் பிறப்பவர்களும் அஞ்ஞானிகளாகி விடுவர். ஆகவே நாம் இத்தகைய தினங்களைக் கொண்டாடி நால்வர் காட்டிய நெறி நின்று ஒழுகவேண்டும்'' இவ்வாறு கலவெட்டித்திடல் காந்திசேவா சங்கத் தலைவர் திரு. ஆர். ரி. சப்பிரமணியம் நாகேசுவர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற மணிவாசகர் தினவிழாவில் தலைமைவகித்து உரையாற்றுகையில் கூறினுர்.

தொடர்ந்து அவர் பேசுகையில் ''தேனின் தன்மை எவ்வளவு காலம் சென்றாலும் கெடுவதில்லை. அதுபோல் திருவாசகம் என்னும் தேனும்தெவிட்டாதுதித்திக்கிறது ஆகவே நாம் திருவாசகத்தைத் தினமும் ஓதவேண்டும்'' என்றுர்.

ஆசிரியர் திரு. ஆ. முத்துக்குமாரு, திருமதி தங்கம்மா, சிவபாதசுந்தரம் செட்டியார், செல்வி க. பரமேசுவரி, திரு க. வைரமுத்து. டாக்டர் சு. வி. மூர்த்தி உட்பட பலர் பேசினர்.

## ‘தகுதிக்கேற்பவே தெரிவு’

மகாரகம, திங்கள்

“கல்வி போதிக்க உண்மையிலேயே தகுதியானவர்களே ஆசிரியர்களாக எதிர்காலத்தில் தெரிவுசெய்யப்படுவார்கள் என கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ இரியகொல, மகாரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. இரியகொல மேலும் பேசுகையில் கூறியதாவது:

நியமனங்களில் தாமதமேற்படுவதற்குக் காரணம் தகுதியானவர்களை நியமிக்க வேண்டும் என்ற நோக்கமே இதுபற்றி நான் வித்தியாதிபதிக்கும் அறிவித்துள்ளேன். ஒருவர் பட்டம் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. ஆசிரியராகத் தொழில்புரிய போதிய பயிற்சி தேவை. இதற்காக அசிரியர்களாகத் தெரிவுசெய்யப்படும் பட்டதாரிகளுக்கு இந்தத்துறையில் பயிற்சிஅளிக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது,

## வெப்பமண்டல நோய்களின் மர்மம்

ஹனேர், ஜூன் 27

வெப்பமண்டல நாடுகளில் மட்டும் மக்களைப் பீடிக்கும் மர்மமான நோய்கள் குறித்து ஆராய்ந்து, காரணங்களைக் கண்டுபிடித்து சிகிச்சைக்கான வழிமுறைகளை வகுக்க, ஜெர்மனியின் பெயர்பெற்ற நோய் ஆராய்ச்சி நிலையம் திட்டமிட்டிருக்கிறது. ‘பெர்ஹார்ட்நாச்நிலையம்’ எனப்படும் இந்த ஆராய்ச்சி ஸ்தாபனத்தார், லைபீரியா நாட்டிற்குச்சென்று ''நகரும் பரிசோதனை நிலையங்களுடன்'' பல்வேறு குக் கிராமங்களுக்குப் போவார்கள். வெப்பமண்டல நாடுகளுக்கு உரித்தான நோய்கள் எப்படி ஏன் பீடிக்கிறது என்பது குறித்து பரிசோதனைகள் மேற்கொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வட வியட்னும் எல்லைக்கருகே கடும சண்டை

## அமெரிக்க படைப்பிரிவு மீது வியட்காங் கடும் தாக்குதல்

### 'வடக்கில் அமெரிக்க விமானத்தாக்குதல் தீவிரமானது'

சைகோன், ஜூன் 27

வடக்கு வியட்னும் எல்லைக்கருகே அமெரிக்க தென்வியட்னும் துருப்புகளுக்கும் வியட்காங்கியருக்குமிடையே கடுமையான சண்டை நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வியட்காங்கியருக்கு எதிராகத் தாக்குதல்கள் நடத்திவந்த அமெரிக்க, தென் வியட்னும் துருப்புகள் வடக்கு வியட்னும் நோக்கி முன்னேறிவிட்டனர் என்றும் இப்பொழுது வடக்கு வியட்னும் எல்லைக்கு வெகு சமீபமாக பயங்கரமான முறையில் சண்டை நடைபெற்றுவருகிறதென்றும் செய்திகள் கூறுகின்றன.

**அமெரிக்க படைக்கு சேதம்**

இதற்கிடையே வியட்காங்கியர் நடத்திய பீரங்கித்தாக்குதல்களினுல் அமெரிக்க படைப்பிரிவொன்றுக்குப் பலத்தசேதம் ஏற்பட்டிருப்பதாக சைகோனிலுள்ள அமெரிக்க ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**வடக்கில்**

வடக்கு வியட்னும் செய்தி ஸ்தாபனம் நேற்று வெளியிட்ட செய்தியொன்றில் வடக்கு வியட்னும் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள் இப்பொழுது மும்மடங்காக அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது.

**தெற்கில்**

தென் வியட்னுமிலுள்ள இரண்டாவது பெரிய பௌத்தஆலயத்தை நேற்று தென்வியட்னும் துருப்புகள் கைப்பற்றினர்.

## ரொடீஷிய வர்த்தக உறவுகளை ஸிரியா துண்டித்தது

டமாஸ்கஸ், ஜூன் 27

ரொடீஷியாவுடனுனசகல பொருளாதார வர்த்தகத் தொடர்புகளையும் ஸிரியா துண்டித்துக் கொண்டது.

ஸிரியா அரசாங்கம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் ரொடீஷியாவுடனுன விமான சேவைகளையும் ஸிரியா ரத்துச் செய்துவிட்டதென்று ரொடீஷிய விமானங்கள் ஸிரியா எல்லை மீது பறப்பதும் ஸிரியா விமான நிலையத்தில் தங்கி நிற்பதற்கும் தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது என்றும் தெரிவித்துள்ளது.

## சோமாலி அரசாங்கம் ராஜினமா

லண்டன், ஜூன் 27

பார்லிமெண்டுக்குக் கொண்டுவரப்பட்ட இரண்டு பிரேரணைகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து சோமாலி அரசாங்கம் ராஜினமா செய்துள்ளது. இந்தஅரசாங்கம் 21 மாத காலம் மட்டுமே பதவியிலிருந்தது.

## ஆசிய - ஆபிரிக்க நாடுகள் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டும்

புதுடில்லி, ஜூன் 27

ஆசிய-ஆபிரிக்க நாடுகள் பரஸ்பரம் நெருக்கமாக ஒத்துழைக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

பிரதமர் இந்திரா ஆசிய-ஆபிரிக்க கழகத்துக்கு அனுப்பி வைத்துள்ளசெய்தியொன்றில் இரு கண்டங்களும் சமாமானத்துக்குப் பாடுபடும் அதே நேரத்தில் ஒன்றையொன்று நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்று கோரியுள்ளார்.

ஆசிய-ஆபிரிக்க நாடுகளை பல பிரச்னைகள் எதிர்நோக்கியிருக்கின்றன. இப்பிரச்னைகளை பரஸ்பரம் ஒத்துழைப்பதன்மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் புகார் தெரிவித்துள்ளார்.

## நந்தா விஜயம்

ஷில்லாங், ஜூன் 27

மலைஜாதித் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தும் பொருட்டு இந்திய உள்துறை மந்திரி திரு. குல்ஸாரிலால் நந்தா நாளை ஷில்லாங்குக்கு விஜயம் செய்வார்.

## நீங்கள் பச்சைக் கீரை பிரியர்களா?

### நஞ்சிருக்கும் கவனம்!

டாட், ஜூன் 27

பச்சைக் கீரைகளை வேகவைத்துச் சாப்பிடும்போது மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் ஏனெனில் சிலவித பச்சைக்கீரையில் 'நஞ்சு' சத்து பதுங்கியிருக்கிறது. இரசாயன உரங்களைக் கணிசமாகப் பயன்படுத்தினுலும் அதன்மூலம் மனிதர்களின் உடல் நலனுக்குத் தீங்கு ஏற்படக்கூடும் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மேற்கு ஜெர்மனியில் கடந்த சில ஆண்டுகளாக பெரிய இலைகளையுடைய ஒருவித பச்சைக்கீரையை சாப்பிட்ட சில குழந்தைகளின் உடல்நலம் கெட்டுவிட்டது; பல குழந்தைகளின் உயிர்களுக்கு ஏற்பட்ட ஆபத்தை டாக்டர்கள் இறுதி நேரத்தில் தவிர்த்து, காப்பாற்றியிருக்கிறார்கள். இதற்கான காரணத்தை மருத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஆபத்துக்குள்ளான குழந்தைகளின் வயிற்றில் இருந்த ஆகாரங்களை பரிசோதனை செய்தபோது, அவற்றில் அளவுக்கு மீறிய 'நைட்டைட்' சத்து இருந்தது தெரியவந்தது. உணவின் சத்து ஜீரணமாகும்போது, போதுமான பிராணவாயு கிடைக்காததால் இவ்வித நஞ்சு உருவாகிறது. இதன் விளைவாக வயிற்றுக்குள் மூச்சுத் திணறுவது போன்று அடைத்துக் கொள்கிறது. பச்சைக்கீரையில் எப்படி நஞ்சு கலந்தது என்பது மருத்துவர்களுக்குப் புரியாத புதிராக இருந்தது. புதிதாகப் பறிக்கப்பட்ட கீரையில் முதலில் 'நைட்ரைட்' இருப்பதில்லை. ஆனால் தீங்கில்லாஉப்புச்சத்து (நைட்ரேட்) இருக்கிறது. கீரையை அப்படியே 24 மணி நேரத்திற்கு வைத்திருந்தால், அதன் தன்மை மாறிவிடுகிறது. அதனுள் இருக்கும் உப்புச்சத்து நஞ்சாக மாறிவிடுகிறது. கீரையைப் பறித்தால், உடனடியாக சமைத்துக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். 5 வாரம் வரையிலான குழந்தைகளுக்கு இந்த விதி முக்கியமாகும்.

பச்சடிக்கீரை, பீன்ஸ், முள்ளங்கி போன்ற தாவர வகைகளிலும் இதேபோல கணிசமான அளவு, 'நைட்ரேட்' உப்புச்சத்து இருக்கிறது. பறித்த பின்னர் இவற்றில் ஏற்படுகிற பண்பு மாற்றம், சிறு குழந்தைகளுக்கு ஆபத்தாகிறது.

## நீரில்லாமல் சமையல்!

ஹனேவர், ஜூன் 27

உலகில் நாள்தோறும் புதுமையான கண்டுபிடிப்புகள் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. ஹனேவர் தொழில் கண்காட்சியில் பலவித புதுமையான சாதனங்கள் இடம்பெற்றிருந்தன. 'லேசான பிளாஸ்டிக் குப்பியில் அடைக்கப்பட்ட பால் வைக்கப்பட்டிருந்தது. பார்த்தால் கொழு, கொழு என்று இருக்கும். எனினும் மூடியைக் கழற்றி பாலை ஊற்றலாம். இதில் இருப்பதால் பாலின் ருசி சிறிதும் மாறுவதில்லை.

தண்ணீர்இன்றி 'மைக்ரேவேவ்' ஒளிக்கதிர் மூலம் சிற்றுண்டி தயாரிக்கும்தானியங்கி இயந்திரம் அனைவரது கவனத்தையும் கவர்ந்தது. பாங்க் மூடப்பட்ட பின்னர் பணம் வாங்க வேண்டுமா? அங்குள்ள இயந்திரத்தில் துளையிடப்பட்ட அட்டையையும். உங்கள்கணக்கு அட்டையையும்செலுத்தினுல் இயந்திரமே பணத்தை எண்ணி கீழே வைத்துவிடும். காலில் 'பூட்சில்' மண் ஒட்டிக் கொண்டிருக்கிறதா? வாசலில் நுழையும்போது, ஒரு வினாடி நின்ருல் போதும்; நின்ற நிலையிலேயே உங்கள் பூட்சுகளை ஒரு இயந்திரம் துடைத்து விடும்.

## கூட்டுச்சேராக் கொள்கைமூலம் நிரந்தர சமாதானம்

### டிட்டோ - நாஸர் கருத்து

அலெக்ஸாந்திரியா, ஜூன் 27

அண்மையில் அலெக்ஸாந்திரியாவில் நிகழ்ந்த டிட்டோ-நாஸர் சந்திப்பின்போது சர்வதேசப் பிரச்னைகள், நிலைமைகள், கூட்டுச்சேராக் கொள்கைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் ஆகியவை குறித்து ஆராயப்பட்டன.

நெருக்கடியான சில பிரச்னைகள் இன்னும் தீர்க்கப்படாமல் இருப்பது குறித்தும், சில ஏகாதிபத்தியக் கொள்கைகளை உடையபிற்போக்குச் சக்திகள் நிரம்பிய நாடுகள் இத்தகைய பிரச்னைகளைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு சில உள்நாட்டுப் பிரச்னைகளில் தலையிட்டுச் சிக்கல்களை மோசமடையச் செய்கின்றன என்றும் இரு தலைவர்களும் கருத்து வெளியிட்டிருந்தனர். இந்த நாடுகளின் விஸ்தரிப்புக்கொள்கைகளினுல் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளின் உள்நாட்டுப் பிரச்னைகளில் தலையிட்டுக் கடைசியில் நேரடி ஆயுதத் தலையீட்டினுல் முடித்துக் கொள்கின்றன என்றும் இரு தலைவர்களும் கண்டித்திருந்தனர்.

இரு ஜனதிபதிகளும் தங்களது சந்திப்பின் முடிவில் வெளியிட்ட கூட்டறிக்கையில் கூட்டுச்சேராக் கொள்கைக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் பற்றியும் இக்கொள்கையை மேலும் வளர்ப்பதற்குச் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. தவிர்க்கமுடியாத வரலாற்றுப் பின்னணிக்குக் கூட்டுச்சேராமையின் அடிப்படைக் கொள்கைகள் அவசியமென்பதைச் சுட்டிக்காட்டிய இரு தலைவர்களும் இக்கொள்கையின் அடிப்படை முக்கியத்துவத்தினை மீண்டும் பெறுவதுடன் தொடர்ந்து சர்வதேச விவகாரங்களில் ஸ்திரமாக இக்கொள்கைகளைக் கையாண்டால் சர்வதேசப் பிரச்னைகளைத் தீர்க்கமுடியுமென்றும் இரு தலைவர்களும் கருத்து வெளியிட்டிருந்தனர்.

சர்வதேச சமாதானத்தையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பது, காலனி ஆட்சி எதிர்ப்புச் சக்திகளுடன் ஒத்துழைப்பது, நாடுகளின் தேவைகளுக்கும், அபிவிருத்திகளுக்கும் உதவியளிப்பது ஆகியவற்றுக்குத் தொடர்ந்து முயற்சி மேற்கொள்வதென்று இரு அதிபர்களும் தங்களது அறிக்கையில் தெரிவித்திருந்தனர்.

அதிபர் டிட்டோவுக்கும், அதிபர் நாஸருக்குமிடையே ஏற்பட்ட சந்திப்பு உலகின் நிரந்தர சமாதானம் நிலவுவதற்கு வழிவகுக்கும் கூட்டுச்சேராக் கொள்கையை மேலும் பலப்படுத்த உதவுமென்றும், கூட்டுச்சேராக் கொள்கைக்குப் புதிய நம்பிக்கையை அளித்திருக்கிறதென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கைக்கு உதவி

லண்டன் ஜூன் 27

இலங்கை அரசாங்கம் பிரிட்டனிடமிருந்து மண்மாரி இயந்திரமொன்றைப் பெறவிருக்கிறது 50,000 பவுண் பெறுமதியான இந்த இயந்திரத்தை பெர்கூஷன் லிமிட்டட்எனப்படும்ஸ்தாபனம் விரைவில்இலங்கைக்கு அனுப்பி வைக்கும்.

## இலங்கைக்கு 2000 கோழிக்குஞ்சுகள்

லண்டன், ஜூன் 27

லண்டனிலிருந்து 2,000 பிரிட்டிஷ் கோழிக்குஞ்சுகள் கொழும்புத்துறைமுகம் வந்தடைந்தன. இலங்கையில் கோழிப்பண்ணை உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடனேயே இக்கோழிக்குஞ்சுகள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

இலங்கை ''ஆர்காடியா'' கம்பனியின் கோரிக்கையின் பேரில் ''ஸ்ரர்லிங்பௌல்ற்றி புரடக்ஸ்'' எனப்படும்பிரிட்டிஷ்கம்பெனிஇந்தக்கோழிக்குஞ்சுகளை இலங்கைக்கு அனுப்பிவைத்திருக்கிறது.

## 300 மாணவர்களின் சமாதான யாத்திரை

லண்டன் ஜூன் 27

அடுத்தஆண்டு பிரிட்டனிலிருந்து 300 மாணவர்கள் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய காமன்வெல்த் நாடுகளுக்கு சமாதான, நல்லெண்ண யாத்திரை ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார்கள். இந்தத் தூதுக் கோஷ்டியில் காமன்வெல்த், பிரிட்டிஷ், அமெரிக்கமாணவர்கள் இடம்பெறுவர்.

அடுத்த ஆண்டு ஜூலை மாதம் 20-ந் திகதி பிரிட்டனில்இருந்துபுறப்படும்அவர்கள் ஆகஸ்ட் மாதம் 23-ந் திகதி புதுடில்லி வந்தடைவார்கள். அங்கு காமன்வெல்த் வாலிபர் விழா ஒன்றை நடாத்துவார்கள்.

## இந்திய விமானத்தில் வெடிகுண்டு பீதி!

நியுயோர்க், ஜூன் 27

இங்கிருந்து இந்தியாவுக்கு நேற்று புறப்படவிருந்த இந்தியவிமானம் ஒன்றில் வெடிகுண்டொன்று இருப்பதாகக் கிடைக்கப்பெற்ற டெலிபோன் செய்தியைத் தொடர்ந்து விமானம் பலமணி நேரம் தாமதித்துப் புறப்பட்டது.

விமானநிலைய அதிகாரிகளுக்கு நேற்றுக் கிடைத்த டெலிபோன் செய்தியொன்றில் இந்திய விமானத்தில் வெடிகுண்டொன்று இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அப்பொழுது அந்த விமானம் புறப்படுவதற்குத் தயாராக இருந்தது.

டெலிபோன்செய்தி கிடைத்தும் விமான நிலைய அதிகாரிகள் அந்த இந்திய விமானத்தைச் சோதனையிடச் சென்றனர். விமானத்தில் இருந்த பிரயாணிகள் எல்லோரும் பீதியடைந்துவெளியேறிவிட்டனர். கடைசியாக அவ்விமானத்தில்வெடிகுண்டொன்றும் இல்லை என்பது தெரியவந்தது.

130 பேர் இருந்த அந்த விமானத்தில் வெடிகுண்டு பீதியினுல் 50 பேர் மட்டுமே இறுதியில் பிரயாணம் செய்தனர்.

## டாக்டர் பட்டம் பெற்ருர்

யாழ்ப்பாணம் செவ். அச்சுவேலியைச் சேர்ந்த திரு. சாம் எஸ். டி. ஜோர்ச் தம்பதிகளின் மகன் டாக்டர் அல்பிரட் ஜோர்ச் லண்டனிலும் அமெரிக்காவிலும் பயிற்சி பெற்று டாக்டர் பட்டம் பெற்று அடுத்த வாரம் இலங்கை திரும்புவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எப்போதும் இன்பமாக இருக்க ஒரே ஒரு வழி, தெய்வத்தின் விருப்பத்துக்கே எல்லாவற்றையும் ஒப்புவித்து, அவர் நம்மை வைத்திருக்கும் எந்த நிலைமை குறித்தும் மனத்திருப்தியாக இருப்பதுதான் சரணாகதி என்பது மனத்திருப்தியும் அமைதியுமேயாகும்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389
யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆனி மீ 14 உ (28-6-66)

# கைத்தறித் துணி

ஜவுளி விலைக்கட்டுப்பாட்டுத் திட்டம் அமுலுக்கு வந்தபின் இந்தத் திட்டத்துக்குள் கட்டுப்படுத்தப்படாத உள்நாட்டுக் கைத்தறித் துணிகளின் விலை அதிகரித்துள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையானால் உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்க ஊக்கமளிக்க வேண்டுமென்ற நோக்கத்தையும் மக்களுக்கு துணிமணிகள் மலிவாகக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தையும் அடியோடு குலைப்பதாகும்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளில் ஒன்றுதான் ஜவுளிவிலைக் கட்டுப்பாட்டுத் திட்டம். சரியான ஆலோசனையும் திட்டவட்டமான ஒரு கொள்கையும் இல்லாமல் இந்தக் கட்டுப்பாட்டுத் திட்டம் அவசரமாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதால் வர்த்தகர்களுக்கும் அரசாங்கத்துக்கு மட்டுமல்லாமல் பொதுமக்களுக்கும் பெரும் தொல்லைகளும் குழப்பமும் ஏற்பட்டுள்ளது. இறக்குமதித் துணிகளின் விலைகளுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதால் விலைக்கட்டுப்பாடு விதிக்கப்படாத கைத்தறித் துணிகளின் விலையை வர்த்தகர்கள் அதிகரிப்பார்களென்பது எதிர்பார்க்காததல்ல. ஆனால் கைத்தறியாளருக்கு ஊக்கமளிப்பதன்மூலம் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவும் உள்நாட்டுப் பொருள்களைப் பொதுமக்கள் உபயோகிப்பதன்மூலம்வெளிநாடு செல்லும் நமது பணத்தை மிச்சப்படுத்துவதுடன் தேசிய உணர்ச்சியை ஏற்படுத்தவும் வேலையில்லாத் திண்டாட்டப்பிரச்னையைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

ஜவுளி விலைக்கட்டுப்பாட்டுத் திட்டம் அமுலுக்கு வந்ததும் ஜவுளிக் கடைகள் முன் ஜனத்திரள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குத் திரண்டு நிற்கத் தொடங்கியது. நேற்று முன்தினமும்கூட கொழும்பில் ஒரு கடையில் ஜவுளி வாங்குவதற்குக் கடை முன் திரண்டு நின்றவர்கள் தடியடி வாங்க வேண்டிய நிலையேற்பட்டது. துணிகள் மலிவு விலையில் கிடைக்குமென்பதை அறிந்த மக்கள் துணி வாங்க அவதியுறுகின்றனர். வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துணிகள் மாத்திரம் மலிவு விலையில் கிடைக்கவும் உள்நாட்டு உற்பத்தித் துணிகளின் விலை அதிகரிக்கவும் இப்பொழுது அமுலுக்கு வந்துள்ள விலைக்கட்டுப்பாட்டுத்திட்டம் வழி வகுக்குமானால் அது எதிர்பார்த்ததற்கு எதிர்மாறான விளைவையே ஏற்படுத்தும்.

எனவே இந்தியாவிலுள்ளது போல வெளிநாட்டுத் துணிகளின் இறக்குமதியை நாம் முற்றாகத் தடைசெய்யக்கூடிய நிலை இன்று இல்லாவிட்டாலும், வெளிநாட்டுத் துணிகள்மீது விதிக்கப்படும் வரித்தொகையை சிறிது அதிகரித்து உள்நாட்டுத்துணிகளை வாங்கும் பொதுமக்களுக்கு அந்தத் துணிகளின் விலையில் ஒரு ரூபாவுக்குப் பத்துச் சதம் அல்லது பதினைந்து சதம் என ஒரு விகிதம் கழிவு கொடுக்கப்படலாம். இதனால் உள்நாட்டுத் துணியால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை வெளிநாட்டுத் துணிமீது விதிக்கப்படும் வரியினால் சமாளிக்க முடியும். அதேசமயம்பாவனையாளர்களுக்கு மலிவுவிலையில் துணி கிடைக்கவும் உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கமளிக்கவும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை குறையவும் வழி பிறக்கும். வர்த்தக அமைச்சும் அரசாங்கமும் இதுவிஷயத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

# நீடிக்கும் வேலை நிறுத்த

தோட்டத் தொழிலாளருக்கும் 17 ரூபா 50 சதம் விசேஷ பஞ்சப்படி வழங்கப்பட வேண்டுமெனக் கோரி ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தோட்டப்பகுதிகளில் ஆரம்பித்த வேலைநிறுத்தம் இன்னும்முடிவடையவில்லை. மேலும் சில தொழிற்சங்கங்களும் இதற்கு ஆதரவும் அனுதாபமும் தெரிவித்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றன. ஆதரவாக வேலைநிறுத்தம் செய்த இலங்கைத் தொழிலாளர் கழகம் அதை நிறுத்திக் கொண்டது.

முதலாளிமாரின் பிடிவாதத்துக்கோ, தொழிலாளரின் எண்ணத்துக்கோ விடமாட்டேன் என்று தொழில் அமைச்சர் கூறியிருக்கிறார். வேலைநிறுத்தம் பெருவெற்றியளித்து வருகிறது என்றும் அதில் லட்சக்கணக்கான தொழிலாளர் கலந்துகொண்டுள்ளனரென்றும் வேலைநிறுத்தம் செய்யும் தொழிற்சங்கங்கள் கூறுகின்றன. ஆனால் முதலாளிமார் சம்மேளனமோ, வேலைநிறுத்தம் ஆரம்பத்தில் போலல்லாது வர வரக் குறைந்து வருகிறதென்றும் தொழிலாளர் தொகை லட்சக்கணக்கில் இல்லை, சில ஆயிரங்கள் தான் என்றும் புள்ளி விபரத்துடன் அறிக்கை வெளியிட்டு வருகிறது.

லட்சமானாலும் ஆயிரமானாலும் தொழிலாளர் வேலைநிறுத்தம் நடைபெறுகிறதென்பது உண்மை. இதனால் முதலாளிக்கு நஷ்டம். தொழிலாளிக்கும் நஷ்டம். இதைவிட நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும். அரசாங்கத்துக்கும் சங்கடம்; பொதுமக்களுக்கும் துன்பம்.

வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளரின் கோரிக்கையை நியாயமற்றதென்றோ, வேறு நோக்கங்களுக்காகத்தான் நடைபெறுகிறதென்றோ கூறிவிட முடியாது. இதர தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் விசேஷ பஞ்சப்படி தோட்டத் தொழிலாளருக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதே அவர்கள் கோரிக்கை இதில் நியாயமிருக்கிறது முதலாளிக்கும் தொழிலாளிக்கும் உள்ள தகராறு இது. அவர்களே பலப்பரீட்சை பார்த்து ஒரு முடிவுக்கு வரட்டும் என்று விட்டுவிடுவது நாட்டுக்கே கேடு விளைவிக்கும். எனவே இந்த வேலை நிறுத்த விஷயத்தில் பிரதமர் தலையிட்டு ஒரு சம [illegible]

# 'ஈழத்துக்கோர் இசைக்கல்லூரி'

## அரங்கேற்றத்தில் நீதியரசர் வற்புறுத்தல்

யாழ்ப்பாணம், செவ்

சென்ற வெள்ளிக்கிழமை மாலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற புங்குடுதீவு பொன். சுந்தரலிங்கத்தின் இசையரங்கேற்றத்தில் தலைமைவகித்துப் பேசுகையில் நீதியரசர் கலாநிதி எச். டபிள்யூ தம்பையா, ஈழத்தில் விரைவில் ஓர் இசைக்கல்லூரி நிறுவப்பட வேண்டுமென்று வற்புறுத்திக் கூறினார்.

சங்கீத பூஷணம் சுந்தரலிங்கத்தின் இசைத்திறமையைப் பல பிரமுகர்கள் பாராட்டினார்கள்.

உடுப்பிட்டி எம். பி. திரு சிவசிதம்பரம் பேசுகையில் 'நான் ஒரு வள்ளலாயிருந்தால் இசைக்கலைஞர்களுக்கு பொற்கட்டிகளை வாரி வாரி வழங்குவேன் என்று உணர்ச்சியுடன் கூறினார்.

'ஈழநாடு' ஆசிரியர் திரு, கே. பி. ஹரன் பாடகரின் இனிய குரலையும் கம்பீரமான உடலழகையும் பண்ணமையப் பாடும் திறனையும் வியந்து பேசினார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் திரு வி. சுப்பிரமணியம், நியாயதுரந்தரர் திரு ப. கதிரவேல், திரு பரம் தில்லைராஜா திரு வ பொன்னம்பலம் முதலியோரும் பாராட்டுரைவழங்கினார்கள்.

ஜி. சண்முகானந்தம் (வயலின்), ஏ. சந்தானகிருஷ்ணன் (மிருதங்கம்), 'குமுக்கா' கணபதி(கஞ்சிரா) ஆகியோர் பக்கவாத்தியம் வாசித்து கச்சேரியை சிறப்பாக்கினார்கள்.

—

# தபால் உடன் விநியோகம்!

யாழ்ப்பாணம், செவ்

நல்லூர்கந்தசாமிகோவில் வீதியிலிருக்கும் தபால்பெட்டியில் போடப்படும் கடிதங்கள் போட்ட சிறிதுநிமிடத்தில் பெட்டியின் கீழ்ப்பக்கத்திலிருக்கும் ஒரு துவாரத்தினால் வெளியே வந்துவிடுவதாக அறியப்படுகிறது.

இவ்வித நிலை கடந்த இருமாதகாலமாக நிலவிவருவதால் இப்பெட்டிமூலம் தபால் அனுப்புபவர்கள் எவ்வித பலனுமடையமுடியாதிருப்பதாகத் தெரிகிறது.

# திரு. எச். வி. பெரேரா

திரு. எச். வி. பெரேராகியூ. ஸி இலங்கையின் வழக்குரைத்துறையில் பிரவேசித்து 50 ஆண்டுகள் பூர்த்தி விழாவை நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் அண்மையில் கொண்டாடினர். 76 வயதான திரு. பேரேரா இலங்கை சுப்ரீம் கோட்டின் வழக்கறிஞரும் பாரிஸ்டருமாவார். வழக்கு விஷயங்கள் சம்பந்தமாக இவரிடம் செல்லும் வழக்காடுபவர்களும் மற்றும் வழக்கறிஞர்கள், நீதிபதிகள், புறக்டர்கள் ஆகியோர் இவரிடம் ஙிமதிப்பு வைத்து வருகின்றனர். மந்திரிகள், அரசியல்வாதிகள் ஆகியோரும் திரு பெரேராவிடம் பெருமதிப்புக்கொண்டுள்ளார்கள். திரு பெரேராவிடம் சகலருக்கும் நன்மதிப்பு ஏற்படக் காரணம் அவருடைய தொழில் திறமை மட்டும் காரணமல்ல. நேர்மை, கண்ணியம், பணிவு மனப்பான்மை ஆகியஅவருடைய நற்குணங்களும் அவர்பால் அநேகருக்குள்ள மதிப்புக் காரணமாகும்.

இலங்கை பெற்றெடுத்த திறமைவாய்ந்த வழக்கறிஞர்களில் ஒருவரான திரு. பெரேரா இப்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கும் இலங்கை வழக்கறிஞர்களில்முதலில் வைத்து எண்ணப்படக்கூடியவர். உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் திறமைமிக்க வழக்கறிஞர்களிலும் திரு. பெரேரா ஒருவராகக் கருதப்படுகிறார். திரு, பெரேரா இன' மத, சமூக பாகுபாடு காட்டாதவர். எல்லா மத, இன சமூக மக்களுடனும் இவர் வெகு கண்ணியமாகப் பழகுவதால் அவருக்கு எல்லாச் சமூகங்களிலும் நல்ல நண்பர்கள் இருக்கிறார்கள்.

சுப்ரீம்கோர்ட் நீதிபதியாக நியமனம் வழங்கப்படும்போது அதை அவர் நிராகரித்தார். அதுபோலவே மந்திரிசபையில் அவரைச் சேர்க்க முயற்சிக்கப்பட்டபோது அதையும் அவர் ஏற்க மறுத்தார்.

இலங்கை வழக்கறிஞர்களின் சட்டம் சம்பந்தப்பட்ட பல பிரச்னைகளுக்குச் சரியான முடிவை எடுப்பதற்கு இவர் பல சமயங்களிலும் உதவி புரிந்திருக்கிறார். திரு. பெரேரா பல தமிழ் வழக்கறிஞர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வெற்றியடையச் செய்தார். இதை இவர் தமிழ்ச் சமூகத்துக்கு செய்த பெரும்பணி என்றே கூறலாம். இவர் எழுப்பியசிலசட்டப்பிரச்னைகளை பிரிவிகௌன்ஸில் ஏற்றுக்கொண்டுள்ளது.

திரு. பெரேரா அவர்கள் முதன்முதலாக மக்கள் மத்தியில் அறிமுகமானது இலங்கையின் தேசிய வீரர் திரு. இராமநாதனுக்கு லண்டனில் நடத்தப்பட்ட பாராட்டுவிழாவில் பங்குபற்றிப் பேசியபோதேயாகும். இந்த வைபவத்தை திரு.பெரேரா இப்பொழுதும் நினைவில் வைத்திருப்பதுடன் சேர். பொன். இராமநாதன்பால் பெருமதிப்பும் வைத்திருக்கிறார். பார்லிமெண்ட் கட்டடத்துக்கு முன்னால் திரு. இராமநாதனின் சிலையை நிறுவுவதற்கு இவர் தக்க ஆலோசனை கூறியதுடன் பெரும் உதவியும் புரிந்திருந்தார்.

நாட்டைப் பாதிக்கக்கூடிய பல விஷயங்களை பாகுபாடின்றியும், தன்னலநோக்குடனின்றியும் எந்தத் தலைவர்களும் செய்யமுடியாத அளவுக்கு திறம்பட தீர்த்து செயலாற்றக்கூடிய திரு, பெரராவின் ஆற்றலை சிங்களமக்களும், தமிழ் மக்களும் உரியமுறையில் அறிந்துகொண்டு, அவரின் சேவையைப்பெறமுடியாமற்போய்விட்டது. இலங்கையர்களாகிய நாம் கடந்தகாலத்தில் விட்டகுறையை எதிர்காலத்திலாவது நிவர்த்திப்போமாக.

— தமிழ் நியாயவாதி

# நாட்டிலும் நகரிலும்

நயினாதீவு நாகபூஷணி அம்மனின் திருவிழா நடந்துகொண்டிருக்கிறது, ஏராளமான யாத்திரீகர்கள் ஊர்காவற்றுறை துறைமுகத்தில் இறங்கி மோட்டார் படகுகளிலும் 'லோஞ்சி'லும் சிறு வள்ளங்களிலும் நயினை அம்மனை தரிசிக்கப் போவார்கள். இவர்களுக்கு சீரானதோர் படகுச்சேவை இல்லாதது பல காலமாக வரும் குறையாயிருந்து வருகிறது. நயினாதீவுக்கு இந்துக்கள் மட்டுமல்ல ஈழத்தேசத்தின் எல்லா மூலைகளிலிருந்தும் பௌத்தர்களும் தரிசனத்துக்கு வருவார்கள்.

மணிமேகலா தெய்வம் வந்திறங்கிய 'மணிபல்லவம் நயினாதீவு தான் என்று ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள். அத்தெய்வம் அங்கே பிக்ஷா பாத்திரம் எடுத்து பஞ்சத்தால் வாடிய மக்களுக்கு அன்னதானம வழங்கியதாக ஐதீகம். மணிமேகலை புத்த சமயத்தை தழுவி தன் காரணமாகத்தான் நயினாதீவில் ஒரு பௌத்த தாகோபம் எழுந்ததோ என்றும் நினைக்கவேண்டியிருக்கிறது.

தமிழரையும் சிங்களவரையும் ஒற்றுமைப்படுத்தும் இரண்டு திவ்விய க்ஷேத்திரங்கள் கதிர்காமத்திலும் நயினாதீவிலும் அமைந்திருப்பது நாம் செய்த புண்ணியம் என்று தான் கூறவேண்டும். என்ன விதமான வேறுபாடுகள் இருந்தபோதிலும் இலங்கை வாழ் இரு பெரும் சமூகத்தினரையும் இணைக்கும் இப்பெரும் சமய பாலம் நயினாதீவு தொடங்கி மறுகரையிலுள்ள கதிர்காமத்தில் முடிவடைகிறது.

ஆகையினால் நயினாதீவு யாத்திரிகர்கள் கஷ்டம் எதுவுமின்றி அங்குள்ள இந்து ஆலயத்தையும் பௌத்த ஆலயத்தையும் வழிபாடு செய்வதற்கு அரசாங்கமும் மற்றும் சம்பந்தப்பட்டவர்களும் தாமதமின்றி தக்க ஒழுங்குகள் செய்யவேண்டும்,

படகு சேவைகள் நயினாதீவுக்கும் அப்பாலுள்ள நெடுந்தீவுக்கும் சமீப காலத்தில் மிகவும் மோசமாகிவிட்டன என்பதைஅறிய பெரும் கவலையாயிருக்கிறது. நாளொன்றுக்கு சுமார் 500-க்கு மேற்பட்டவர்கள் இக்கரைக்கும் அக்கரைக்குமிடையில் பிரயாணம் செய்கிறார்கள் யாழ்ப்பாணத்துக்கு வெளியிலிருந்து பௌத்த யாத்திரீகள் கோஷ்டிகள் வந்துவிட்டால் தொகை இரட்டிப்பாகும்.

பொதுவாக நயினாதீவுத் திருவிழா காலத்தில் வேகமாக வீசிய சோழகக்காற்றின் கொந்தளிப்பு குறைந்து 'ஆனித் தூக்கம்' என்ற ஓர் அமைதி நிலவும். இவ்வருடமும் இதற்கு முந்திய வருடங்களிலும் இந்த 'ஆனித்தூக்கம்' 'ஆடித்தூக்கம்' ஆகி வருவது கால மாறுதல்களினால் ஏற்பட்ட கோளாறு என்று நினைக்கலாம். இதற்காக திருவிழா பட்சத்தை மாற்றமுடியுமா?

விஞ்ஞானம் விண்ணையே வெற்றி கொள்ளும் இந்தக் காலத்தில் இரண்டு பாகை ஆழத்திலுமில்லாத ஒரு சிறு கடலை ஏழுகட்டைதாண்டிச் செல்வதற்கு நமது யாழ்ப்பாணத்தில் நவீன வசதிகள் இல்லாதது எவ்வளவு ஒரு பெரிய வெட்கக்கேடு!

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சமாதான நீதவான்



மாவிட்டபுரம், திங்கள்
அச்சுவேலியைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. தாமோதரம் குணரத்தினம் யாழ்ப்பாண மாவட்டப் பகுதிக்குச் சமாதான நீதவானாக மல்லாகம் நீதிபதி திரு எவ். எச். அத்துருபானு முன்னிலையில் இன்று சத்தியப் பிரமாணம்செய்து கொண்டார்

யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பரமேஸ்வராக் கல்லூரியிலும் கல்வி பயின்றஇவர் பின்னர் பல வருடங்களாய் தேயிலே, றப்பர் அரசினர் இலாக்காக்களில்பணியாற்றி 1939-ம் ஆண்டில் சட்டக் கல்லூரியிற் சேர்ந்தார். சட்டக்கல்லூரியில் முதல் ஸ்தானங்கள் பெற்று 1943-ல் வழக்கறிஞராக வெளியேறினர். இவர் 1947-ம் ஆண்டு தொடக்கம் சிவில் கிறிமினல் வழக்கறிஞராக யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றங்களில் கடமைபுரிகிறுர்.

சில ஆண்டுகளாக அச்சுவேலி கிராமசபைத் தலைவராக பணியாற்றிய இவர் கடந்த பாராளுமன்றத்தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் அபேட்சகராகக் கோப்பாய்த் தொகுதிக்குப் போட்டியிட்டார்.

## எதிரிகள் விடுதலை

வல்வெட்டித்துறை, திங்கள்
தொண்டமானாற்றைச் சேர்ந்த வீ. இராசசேகரம் என்பவருக்கு அதேயிடத்தைச் சேர்ந்த இளையதம்பி இராசையா, இராசையா தனிநாயகம் என்பவர்கள் சென்ற பங்குனிமாதம் 22ம் திகதி கம்பியாலும் கத்தியாலும் தாக்கிக் காயம் விளைவித்ததாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. றுபேர்ட் சில்வாமுன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின்போது திரு. இ. சிறீ பத்மநாதன், டாக்டர் சோமசுந்தரம். காங்கேசன் துறைப் பொலிஸ்சார்ஜன்ட் திரு. எம். பி. அமிர்தநாதன் ஆகியோர் சாட்சியமளித்த பின்நீதிபதி எதிரிகளை விடுதலைசெய்தார்.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. வி. செல்லத்தம்பியின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. சண்முகநாதன் ஆஜராஞர். வழக்காளிதரப்பில்பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. எவ். ஸி. பத்திராஜுவின் உதவியுடன் வழக்கறிஞர்கள் திரு. கே. இரத்தினசிங்கம், திரு. என் நடராசா ஆகியோரின் அனுசரணையுடன் அட்வக்கேற் திரு. எம். சிவசிதம்பரம் ஆஜராஞர்.

## பகைநாகர்

கோஹிமா, ஜூன் 26
இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடன் பேச்சுக்கள் நடத்துவதென்று பகைநாகர் தலைவர்கள் முடிவுசெய்துள்ளனர்.

## கதிர்காமத்திற்கு பாத யாத்திரை

திருமலை, திங்கள்
திருகோணமலையிலிருந்து சிலர் கதிர்காமத்திற்கு காட்டுவழியாக சுமார் 62 மைல் பாதயாத்திரை மூலம் புறப்பட இருக்கிறார்கள். அவர்கள் ஜூலை மாதம் 18-ந் திகதி இரவு திங்கட்கிழமை திருமலையிலிருந்து புகைவண்டி மூலம் புறப்பட்டுமறுநாள் வாழைச்சேனையில் இறங்கி மட்டக்களப்பிலுள்ள விசேட தலங்களைத் தரிசித்து இரவு திருக்கோயிலை அடைவார்கள். ஜூலை 13ம்திகதி பாணமைபோய்ச் சேர்ந்து 14-ந் திகதி காலை பாத யாத்திரை தொடங்கி உகந்தையில் தங்குவார்கள், 18-ந் திகதி திங்கட்கிழமை கதிர்காமம் கொடியேற்றத்திற்கு கோயிலை சென்றடைவார்கள். பின்னர் 21-ந் திகதி காலை கதிர்காமத்திலிருந்து திருமலைக்கு புறப்படுவார்கள். இப்பாதயாத்திரையை சிவயோக சமாசத்தினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

## மானிப்பாயில் கூட்டுறவு மீன் விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், திங்கள்
வடமாகாணம் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினர் சென்ற சனிக்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் சந்தையில் கூட்டுறவு மீன் விற்பனவு நிலையத்தை திறந்து வைத்துள்ளனர்மானிப்பாய் பட்டினசபைத்தலைவர் திரு. சி. இராசேந்திரன் இந்நிலையத்தைத் திறந்து வைத்தார் யாழ், மேற்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு, பொன்னுத்துரை, சமாசத் தலைவர் திரு. ச. ஃபிரனிஸ்லாஸ், மீன்பிடிப்பரிசோதகர் திரு. பிலிப் ஆகியோர் இவ் வைபவத்தில் கலந்துகொண்டனர்.

பட்டினசபைத் தலைவர் இந் நிலையத்தை திறப்பதில் காட்டியஊக்கத்தையும் ஆதரவையும் பாராட்டிப் பேசியசமாசத்தலைவர் கடல் தொழிலாளர் சார்பாக நன்றி கூறினர்.

''பொதுமக்கள் நியாயமான விலைக்கு மீன் வாங்கவும் தொழிலாளர் தமதுபிரயாசைக்கு நல்ல விலையைப் பெறவும் இந்நிலையம்சேவை புரியுமென நம்புவதாகவும் சமாசத்தலைவர் எடுத்துக் கூறினர்.

## மந்திரி மீது நோட்டீஸ்

பம்பலப்பிட்டி, திங்கள்
நாகொடை கிராம சபையின் தலைவரை ஸ்தலஸ்தாபன மந்திரி பதவி நீக்கம் செய்தது சட்டமுரண்பட்டதென்றும் அந்த உத்தரவை ரத்துச் செய்யும்படியும் கோரி நாகொடை கி. ச. முன்னுள் தலைவர் திரு. டபிள்யு. திஸநாயக்கா சுப்றீம்கோட்டில் தாக்கல்செய்திருந்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட நீதியரசர்கள் அபயசுந்தர, அலெஸ் ஆகியோர் மந்திரி மீது நோட்டீஸ் பிறப்பிக்குமாறு உத்தரவிட்டனர்.

## சிங்களத்தில் மட்டுமே பற்றுச் சீட்டு

சுழிபுரம், திங்கள்
நயினாதீவுக்கு பிரயாணிகளை ஏற்றிச்செல்லும் வள்ளங்களில் கொடுக்கப்படும் பற்றுச் சீட்டு சிங்கள மொழியில்விநியோகிக்கப்படுகிறது புங்குடுதீவுக்கும் நயினாதீவுக்கும் இடையே சேவை செய்யும் வள்ளத்தில் புங்குடுதீவு நயினாதீவு, ஆகிய தமிழ் சொல்லுகளைத்தவிர மற்றய எல்லாச் சொற்களும் தனிச் சிங்களத்தில்மட்டுமே காணப்படுகின்றன.

## நீச்சலடிக்கும் இயந்திரம்

ஸ்டட்கார்ட், ஜூன் 27
நீச்சலடிக்கும் இயந்திரம் ஒன்றை மேற்கு ஜெர்மனி தொழிலதிபர் ஒருவர் உருவாக்கியுள்ளார். கால்களில் பின்னிக்கொள்ளும் பாசிகள் இருக்கும் நீரில் செல்லவும், அவற்றை அழிக்க மருந்து தெளிக்கவும், இந்த இயந்திரம் பயன்படும். காற்றை வெளியே வேகமாகத் தள்ளும் முறையின் மூலம் இந்த இயந்திரம் நீச்சலடிப்பதுபோல மிதந்து செல்கிறது

## "மணல்மீது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திகதி காலை ஏழு மணிக்கு எதிரி தமது காரை வழக்கமான இடத்துக்கு (மகல்லே ஓயா) கொண்டு வந்தார். காரைக் கழுவிய பின்னர் சுமார் ஒன்றரைமணி நேரத்துக்குப்பின்னர் அவர் போய் விட்டார்''

மற்றுமொரு சாட்சியான 16 வயதுள்ள ஆர். பியசேன சாட்சியமளிக்கையில் கடந்த மார்ச் மாதம் 20-ந் திகதி தெதுறுஓயா ஆற்றுப் படுக்கை ஓரமாகத் தாம் சென்றுகொண்டிருந்த சில நிமிடங்களில் மணல்மீது இரத்தக்கறைகள் இருந்ததைக் தாம் கண்டதாகவும் ஒரு இடத்தில் மணல், மேடாகக் குவிக்கப்பட்டிருந்ததென்றும் இவ்விபரத்தை தர்மசேன என்ற தமது நண்பனிடம்சொன்னதாகவும் தெரிவித்தார்.

மேல்விசாரணை ஜூலை மாதம் 7-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## ஆஸ்பத்திரியில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் போது மயக்க முற்று விழுந்தார் என்றும் உடனடியாக மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட இவர் பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பட்டார் என்றும் விசாரணையின்போது தெரியவந்தது. இயற்கை மரணம் எனத் தீர்மானிக்கப்பட்டது.



## உலகப் பிரயாணம் செல்கிறார்

பல நாடுகளில் உள்ள இளைஞர்களைப்பற்றி அறிந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் றேட் அன் ரான்ஸ்போட் நிர்வாக அதிபரும் யாழ்ப்பாணம் இளைஞர் பொருளாதார சமூக நலன் சபையின் செயலாளருமான திரு வி சத்தியநாதன் உலக சுற்றுப்பிரயாணம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார். சிங்கப்பூர், ஹொங்கொங், யப்பான், அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகியவை இவர்செல்லவிருக்கும் நாடுகளில் சிலவாகும். இவர் தனது சுற்றுப்பிரயாணத்தின்போது யப்பானில் நடைபெறவிருக்கும் எண்பது நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் உலக இளைஞர் சபையின் 6 வது பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வார். ஆசிய நிறுவனம் திரு. சத்தியநாதனின் உலக சுற்றுப்பிரயாணத்தை ஒழுங்குசெய்துள்ளது.

மகளிர் தொழிற் பயிற்சி ஸ்தாபனம் யாழ்ப்பாணம் விளையாட்டரங்குக் கழகம் அகில இலங்கை இளைஞர் சபைகள் சங்கம் ஆகியவற்றின் காரியதரிசியாகவும் திரு சத்தியநாதன் சேவை புரிந்துவருகிறுர். இவர்பல விளையாட்டுக் கலாச்சார இயக்கங்களிலும் கலந்து கொண்டு தொண்டுபுரிந்து வருகிறுர் இவர் ரோட்டரி சங்கத்தின் கவர்னர் பிரதிநிதிகாகவும் கடமையாற்றியிருக்கிறுர். இவர் மோட்டார் கைத்தொழில் நிறுவனத்தின் கூட்டு அங்கத்தவ (ஏ. எம். ஐ. எம். ஐ.)ருமாவர்,

## ‘ஒவ்வொரு பிரஜைக்கும் வேலைவாய்ப்பிருக்கவேண்டும்’

### ஜெனீவாவில் எமது பிரதிநிதி கூறுகிறுர்

ஜெனீவா, ஜூன் 27
‘எந்த நாடும், அது அபிவிருத்தியடைந்துவரும் நாடாக இருந்தாலும்சரி அபிவிருத்தியடையாத நாடாக இருந்தாலும் சரி தனது நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் பயன்தரத்தக்கவேலையில் அமர்த்தப்பட்டிருக்குமாறு, பார்த்துக்கொள்ளவேண்டும்.’

இவ்வாறு ஜெனீவாவில் நடைபெற்றுவரும் சர்வதேசதொழிலாளர் சம்மேளனத்தின் 50-வது மகாநாட்டில்இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து உரை நிகழ்த்திய திரு. மலோறி ஈ. விஜயசிங்கா குறிப்பிட்டார்.

120 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றும் இம் மகாநாட்டில் திரு. விஜயசிங்கா மேலும் பேசுகையில் கூறியதாவது:

எமது நாட்டிலுள்ள சுமார் ஒரு கோடியே 20 லட்சம் ஜனத்தொகையில் 60 சத விதத்தினர் 21 வயதுக்குக் குறைந்தவர்கள்.

நீண்டகாலமாக எமது கல்விமுறை வெறும் புத்தகப்படிப்பாகவே இருந்து வந்துள்ளது. இந்த முறை இப்போது தொழிற்துறை விவசாயம் இவற்றுக்குப் பொருத்தமாக அமையக் கூடியதாக மாற்றப்பட்டு வந்தாலும் சில காலத்துக்கு நாம் காரியாலய வேலைகளை மட்டுமே செய்யக்கூடிய இளைஞர்களையே அதிகமாகக்கொண்டிருப்போம்.

சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் தொழில்நுட்ப பயிற்சியில் கொண்டிருக்கும் தனது விசேஷ அனுபவத்தைக் கொண்டு இந்தப் பிரச்னைக்கு நல்ல தீர்வு காணமுற்படவேண்டும்.

இலங்கை அரசாங்கம் இளைஞர்கள்மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்க இப்பொழுது தனிப்பட்ட ஸ்தாபனங்களின் உதவியையும் கோரியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. இது பொருளாதாரத்துறையிலும் நல்ல அபிவிருத்தியை ஏற்படுத்த வழிகோலும் என நம்பலாம்.

கி. மு. சங்கங்கள்

## ‘அபிவிருத்திக்காக உழைக்கவேண்டும்’

யாழ்ப்பாணம், செவ்.
''பொருளாதாரத் துறையிலேனும், கலாச்சாரத் துறையிலேனும் அபிவிருத்தி ஏற்பட முடியுமானல் அது கிராமமுன்னேற்ற இயக்கத்தின் ஆதரவிலேயே ஏற்பட முடியும். கிராமமுன்னேற்றச்சங்கங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள பல துறை அபிவிருத்தித்திட்டங்களைத் தயாரித்தும் பரிசீலனைசெய்து பல அம்சங்களைக்கொண்ட ஒருபுதிய திட்டத்தின் கீழ் செயற்படவேண்டும். இவ்வாறு வலி வடக்கு கிராமமுன்னேற்றச்சங்கங்களின் சமாசசெயலாளர் திரு. தி. சி. சண்முகலிங்கம் கோண்டாவில் மஞ்சத்தடி கிராமமுன்னேற்றச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கோண்டாவில் மஞ்சத்தடி விவேகானந்தா சனசமூகநிலைய மண்டபத்தில் திரு. பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் இணுவில் தமிழ்மன்றத் தலைவர் திரு. கே, எஸ். ஆனந்தன் பேசுகையில் எந்த ஒரு பொது ஸ்தாபனத்திற்கும் மக்கள் ஆதரவுவேண்டும். மக்கள் ஆதரவு அற்ற ஸ்தாபனம் மக்களுக்கு தொண்டுசெய்ய முடியாது என்று குறிப்பிட்டார்.

## கலைவிழா

யாழ்ப்பாணம், செவ்.
வட்டுக்கோட்டைக் கலைக் கழகத்தின் நான்காவது ஆண்டு நிறைவுக் கலைவிழா எதிர்வரும்வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு வட்டுக்கோட்டை கலா நிலைய திறந்தவெளியரங்கில் வட்டுக்கோட்டை எம். பி. திரு அ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கிறது. சிறப்பு விருந்தினராக கலாநிதி எச். டபிள்யு. தம்பையா கியு. சி. கலந்து கொள்கின்றார். விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## நாட்டிலும் நகரிலும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தீவுப்பகுதி மக்கள் வர்த்தகம், கல்வி, கலை முதலிய துறைகளில் மிகவும் முன்னேறி வரும் இந்நாட்களில் அவர்களுக்கு இப்படிப்பட்டதோர் குறைபாடு இருப்பது மிகவும் அநீதி என்று எனக்குத் தோன்றுகிறது. சம்பந்தப்பட்டவர்கள் இக்குறைபாட்டை விரைவில் அகற்றி வைத்தால் அது மகிழ்ச்சிக் [illegible]

## கடற்றொழிலாளருக்கு

ஜப்பானிலிருந்து கடற் தொழில் சம்பந்தமான சகல உபகரணங்களும் இறக்குமதிசெய்ய விரும்புவோர், 10-7-66க்கு முன் ரூபா 3 அனுப்பி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளவும். ''சிவஸ்தன்'', கந்தர் மடம், யாழ்ப்பாணம். 627

விற்பனையாளர் தேவை

வந்தாறுமூலை,
ஏறூவூர்,
காத்தான்குடி,
அரைப்பற்றை,
கல்லாறு,
களுதாவளை,
நீலாவணை,
சம்மாந்துறை,
அக்கரைப்பற்று,
நிந்தாவூர்,
பொத்துவில்.

ஆகிய இடங்களில் ‘ஈழநாடு’ பத்திரிகை விற்பனை செய்வதற்கு ஏஜன்டுகள் தேவை.

மனுச்செய்யவும்:
விநியோக மனேஜர்,
ஈழநாடு,
த.பெ. எண் 49,
யாழ்ப்பாணம். 620

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரூபாய் மதிப்பை குறைப்பதன் நோக்கம் என்ன?

— டாக்டர் கணபதி M. Sc., Ph. D. —

செலாவணியின் பலமும் நிலத்தன்மையும் அதன் அமைப்பின் இயல்பான குணங்களிலில்லை. ஆனல் அதை நிர்வகிப்பவர்களுடைய விவேகத்திலும் திறமையிலுமே நிலைத்திருக்கின்றது. போதிய கையிருப்புகளுடன் நல்ல முறையில் நிர்வகிக்கப்படும் ஒரு செலாவணி ஒருநாட்டுக்குச் செல்வாக்கைக் கொடுக்கிறது. நாணய மதிப்புக் குறைப்பு அரசாங்கத்தின் செல்வாக்கைக் குறைத்து அதன் அரசியல் வாய்ப்பு வளங்களைப் பாழாக்கக்கூடிய நாணய முறைக்குரிய நடவடிக்கைகளில் ஒன்ருகும். ஏனெனில் இது பலவீனத்தின் அறிகுறியாகவோ அல்லது தவருன கொள்கைகளைப் பின்பற்றப்பட்டதாக ஒப்புக்கொண்டதாகவோ கருதப்படுகிறது.

கள் செலாவணியின் மதிப்பைக் குறைத்தனர். கிறிஸ்துவுக்குப்பின் மூன்றும்நான்காம் நூற்ருண்டுகளில் அவர்கள் அடிக்கடி நாணயமதிப்பைக் குறைத்தனர் ஆனல் அனைத்துலக வர்த்தகப்பெருக்கியதோடு ஒரு நாட்டின் செலாவணியின் மதிப்பை அடிக்கடி குறைக்கும் மனப்பான்மை மாறியது. அடிக்கடி நாணய மதிப்பைக் குறைத்தால் அனைத்துலகச்செலாவணியின் நிலைத்தன்மை சீர்குலைந்தது. அடுத்தபடியாக இது உலகவர்த்தகத்தின் வளர்ச்சியையும், விஸ்தரிப்பையும் பாதித்தது. எனவே 1914-ம் ஆண்டுக்குமுன் சில பத்தாண்டுகளில் அதாவது தங்க நாணயத்திட்டம் அமுலில் இருந்த காலத்தில் ''செய்யப்படாத காரியங்களில்'' ஒன்று நாணய மதிப்புக் குறைப்பு எனக் கருதப்பட்டது. இது பிரஸ்தாபச் செலாவணியை வைத்திருக்கும் நாடுகளுக்கும் இதர நாடுகளுக்கும் நம்பிக்கைத் துரோகம் செய்வதாகும் என்று கருதப்பட்டது.

## நாடும் நாமும்

தங்கள்நாடுகளின் நாணய முறைக்குரிய தலைவிதிகளுக்குக் கணிசமான அளவுக்கு எஜமானர்கள் அரசாங்கங்களே என்று காட்டுவதற்குப் போதிய உதாரணங்கள் இருக்கின்றன ஒரு குறிப்பிட்ட பொருளியல், சமூக அல்லது அரசியல் கொள்கையை வேணடுமென்றே பின்பற்றுவதன் விளைவாகவே அவை தங்கள் செலாவணிகளின் மதிப்பைக் குறைப்பதற்கு அடிக்கடி முடிவுசெய்கின்றன.

நாணய முறைக்குரிய கொள்கை என்ற முறையில் ஒருசெலாவணியின் மதிப்பைக் குறைப்பது அண்மையில் நிகழ்ந்த சம்பவம் அல்ல, புராதன ரோம் காலத்திலேயே இது நடந்தது. அதற்கு முன்னர் கூட நடந்தது அத்தெனியன் அரசியல்வாதியான சோலோன் கிறிஸ்துவுக்கு முன்னுல் ஆருவது நூற்ருண்டிலேயே டிராச்மா செலாவணியின் மதிப்பைக்குறைத்தார். ரோமானியர், பியூனிக் யுத்தங்களின்போது தங்

தங்க நாணயத் திட்டம் அமுலிலிருந்த காலத்தில் ஒருநாடு தனது செலாவணி அதிக மதிப்புப் பெற்றிருக்கிறதென்று கண்டுபிடித்தால் அது எவ்வளவுதான் வேதனை அளித்தபோதிலும் தனது சொந்த உள்நாட்டு முயற்சிகளால் தனது செலாவணியை மீண்டும் சமநிலைக்குக்கொண்டுவர வேண்டும். 1914-ம் ஆண்டிலிருந்து 1918-ம் ஆண்டுவரை நடைபெற்ற உலகப்போர் இந்த மனப்பான்மையை நிலைக்கக் கூடியதாக வைத்திருக்கவில்லை. யுத்தகாலத்திற்கிடையே வேண்டுமென்றே செய்யப்பட்டதற்குப் பல உதாரணங்கள் இருக்கின்றன. நாணய மதிப்பைக் குறைத்த பல நடுகளில் பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா ஆகியவை சில நாடுகளாகும். கடைசியாகச் செய்யப்பட்ட பெரிய நாணய மதிப்புக் குறைப்புக் குறைப்பு 1949-ம ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்டேர்லிங் நாணயத்தின் மதிப்பு 30 விழுக்காடு குறைக்கப்பட்டது. இச்சமயத்தில் பாகிஸ்தானைத்தவிர ஸ்டேர்லிங் நாணயப் பிரதேச நாடுகளும், பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளும் அதே அளவுக்குத் தங்கள் நாணயங்களின் மதிப்பைக் ஒரே சமயத்தில் குறைத்தன. ஆனல் அமெரிக்கா மட்டும் தனது நாணயத்தின் மதிப்பைக் குறைக்கவில்லை.




### விலையுயர்வு

ஒரு பொருளின் மதிப்பை உயர்த்தும் காரணிகளில் காலம் முக்கிய இடம் வகிக்கிறது. ஒரு காலத்தில் மதிப்பற்று அதிகமாக இருக்கும் பொருளைச் சேகரித்து வைத்திருப்பதன் மூலம் அதன் மதிப்பை உயர்த்த முடியும். இது பொருட்களின் மதிப்புயர்வையும் விலையுயர்வையும் பொறுத்திருக்கும்.

தமிழில் விஞ்ஞானம் — பரீட்சையில் தோல்வி

# ஆசிரியரின் ஆக்கக் குறைவும் போதனை வசதியின்மையுமே காரணம்

— . பொ. செல்லையா B. Sc. —

தாய்மொழி மூலம் கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டால் கற்றுக்கொடுக்கப்படுகின்றதைப் புரிகின்ற ஆற்றல் மாணவர்களுக்கு இருப்பது இயற்கை.

எனினும் கடந்த டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற ஜி. சி. ஈ தேர்வில்—குறிப்பாக விஞ்ஞானப் பாடத்தில் மாணவர்கள்வெற்றிபெருததற்கு முக்கிய காரணம் படிக்க வேண்டிய பகுதிக்குத் திட்டவட்டமான ஒரு புத்தகமேனும் இல்லாததே.

### விஞ்ஞான கூடம்

பரிசோதனைக்கு முக்கிய இடமளிக்கும் வகையில் தற்போதைய விஞ்ஞான கூடங்கள் அமையவில்லை. வேதியலில் வளம் இருந்தால் உயிரியல் வரட்சியாக இருக்கும். ஒரே பாடத்திற்குப் பல ஆசிரியர்கள் சென்றமை; வேறு வேறு பாடங்களைச் சொல்லிக் கொடுப்பவர்கள் கூடி ஒவ்வொருவருக்கும் உள்ள குறைகளைக் கண்டு, விஞ்ஞான கூடத்தை ஒரு பொது விஞ்ஞானகூடமாக வளர்க்காமல் விஞ்ஞான கூடத்தின் ஆட்சி (மேற்பார்வை) யார் கையில் இருக்கிறதோ அவர் தனது பாடத்துறைக்குரிய பரிசோதனைப் பொருள்களைவிருத்தி செய்வது; போதிய வசதியின்மை; காலம் போதாமை ஆகியவையும் இதற்குக்காரமாகும்.

### மாணவர் தெரிவு

மாணவர்கள் சரியான முறையில் தேர்ந்தெடுக்கப்படாமையும் மற்ருெரு முக்கிய காரணம். துலங்கும் ஓவியத்தைக்கீறும் வேட்கையுள்ள மாணவன் விலங்கின் பாரம்பரியத்தைப்பற்றி அறிய ஆசைகொள்ளமாட்டான் இசையில் நாட்டமுள்ளவன் தசையைப் பற்றிச் சிந்திப்பானு? ஆதலால் மாணவர்களின் உண்மையான விருப்பத்திற்கேற்றவாறு பாடங்கள் அமையவில்லை,

பெற்ருர்-ஆசிரியர் சங்கங்கள் உரியமுறையில் செயல்படாமையும் பரீட்சைப் பெறுபேறுகளுக்குக் காரணமாயிருக்கிறது. கல்லூரியில் மாணவர்கள் என்ன செய்கிருர்கள் என்பது பெற்ருர்களுக்குத் தெரியாது வீட்டில் என்ன நடக்கிறது என்பது ஆசிரியர்களுக்குத் தெரியாது. இந்தநிலை மாணவர்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

கடைசியாக அரசியல் தொடர்புகள் வகுப்பறைகள் வரையில் சென்றிருந்தன. இதுவும் ஓரளவுமாணவர்களைப் பாதித்திருக்கின்றது என்றே கூறவேண்டும். தேர்தல், மொழிப்பிரச்னை, முதலியவற்றிலிருந்து காஷ்மீரப் பிரச்னை வரையான விஷயங்கள் வகுப்பறையில் புகுந்துகொள்வதாலும் மறைமுகமான ஒருவகை இழப்பை உண்டுபண்ணியிருந்தன.

### ரியூற்றறிகள்

பொதுவாக கல்லூரியைத் தவிர்ந்து வெளியில் இருக்கின்ற ''ரியூற்றறிகள்'' கல்லூரிகளிலே கொடுக்கப்படுகின்ற குறிப்புகள் (Notes) வெளியிடங்களில் அச்சிட்டு விற்கப்படுகின்ற விடைத்தாள்கள் முதலியனவும் மாணவர்களை நம்பிக்கையை வேறுவழியிற் செலுத்தி தன்னம்பிக்கை இல்லாதவர்களாக்கித் தன்னறிவற்ற நிலையை உருவாக்கியதால் புதுமுறையில் முதலாவதாக என்ன வருகிறதோ என்ற ஏக்கத்தால் குறிப்பிடத்தக்க நட்டத்தை மாணவர்கள் பெற்றுர்கள்,

ஆதலால் விஞ்ஞானப் பாடங்களில் தேர்ச்சிபெருததற்குப் புகட்டப்பட்ட மொழி எந்தவகையிலும் காரணமல்ல. போதனையில் ஏற்பட்ட வாய்ப்பின்மைகளும் வசதிக்குறைவுகளும் மாணவர்களின் ஊக்கமின்மையும் ஆசிரியர்களின் ஆக்கக்குறைவுந்தான் காரணங்களாகும்.


### நாடு வளம்பெற...

நமது நாட்டில் வளம் கொழிக்க வேண்டுமெனில், நாட்டின் கமத்தொழில் கைத்தொழில், அபிவிருத்தியில் சிரத்தையெடுத்தல் வேண்டும் செய்யும் தொழிலைத் தெய்வமாகப்போற்றுமளவுக்கு இளம் உள்ளங்கள் வளர்ச்சியடைய வேண்டும்.

தமிழில் விஞ்ஞானம் படித்து முதன்முதலில் ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் அனேகர் தோல்விகண்டதற்கான காரணங்களை நேரடியாக ஆராய்கிருர் கட்டுரையாசிரியர். ஆசிரியரான இவர் தனது அனுபவத்தை அம்சம் அம்சமாக சுருக்கமாகவும், விளக்கமாகவும் விபரிக்கிருர் இங்கு.

நாணய மதிப்பைக்குறைப்பதின் பொருளும் நோக்கமும் என்ன? ஒருநாடு தனது செலாவணியை அதிக மதிப்பிலிருந்து குறைந்த மதிப்புள்ள செலாவணியாகப் போதிய அளவுக்கு தனது செலாவணி மதிப்பைக் குறைத்தால் இதர நாடுகளின் செலாவணிகள் அதிக மதிப்புப் பெறுகின்றன இது ஏற்றுமதிகளை ஊக்குவித்து இறக்குமதிகளின் ஊக்கத்தைக் கெடுக்கின்றது. நாணயமதிப்புக் குறைக்கப்படுவதைத் தொடர்ந்து உடனடியாக விலைவாசிகள் அதே அளவுக்கு உயருவதில்லை. இதன் விளைவாக எந்த நாட்டின்செலாவனி மதிப்புக் குறைக்கப்படுகிறதோ அந்த அந்தநாட்டின் பொருட்கள் அந்நியர்களுக்கு மலிவாக இருக்கிறது. வெளிநாட்டுப் பொருட்கள் அந்நியச்செலாவணிகளின் மதிப்பு அதிகரிப்பதால் உள்நாட்டில் உபயோகிப்பவர்களுக்கு அதிக விலையுள்ளதாக இருக்கின்றன. எப்படி இருந்த போதிலும் உள்நாட்டுப் பொருட்களின் விலைகள் செலாவணி மதிப்புக்குறைக்கப்பட்டதற்குஏற்ப தங்களைச் சீர்ப்படுத்திக்கொள்ளும்வரை கொடுக்கவேண்டிய பாக்கிகளின் நிலைமை தற்காலிகமாக அபிவிருத்தி அடைகிறது. ஆனல் தொடக்கத்தில் நாணய மதிப்பைக் குறைத்த நாடு எந்தநாடுகளுடன் போட்டி போடுகிறதோ அந்த நாடுகளின் செலாவணிகளின் மதிப்புக் குறைப்பினுல் இதைச்சமாளிக்க முடியும். இத்தகைய போட்டிபோடும்

(7-ம் பக்கம் பார்க்க)



## வளரும் விஞ்ஞானம்

### உப்புநீக்கும் அதிசயமாத்திரை

கடல்நீரை உப்பு நீக்கி நன்னீராக்கும் ஒரு புதிய மாத்திரையை ஜெர்மனியில் மருந்து உற்பத்தி தொழிற்சாலையொன்று விற்பனைக்குக் கொண்டுவந்துள்ளது. இந்த மாத்திரை கடல் நீரிலுள்ள உப்பை இரண்டுசத வீதமாகக் குறைத்து விடுகிறது. கடற்பிரயாணிகளுக்கு இந்த மாத்திரை பெரிதும் பயன்படும். இம்மாத்திரையை உபயோகித்து உப்பு நீக்கப்பட்ட தண்ணீர் சுத்தமாக இருப்பதால், அதனைப் பயமின்றிக் குடிக்கலாம்.

இந்த மாத்திரை 30 நிமிடங்களில் உப்புநீரை நன்னீராக்கி விடுகிறது. இதர முறைகள் மூலம் அதைச் செய்ய குறைந்தபட்சம் ஒரு மணிநேரமாவது வேண்டும்.

ஃ ஃ ஃ

### மணலிலும் விவசாயம்

ஜெர்மனில் சுமார் 123, 555 ஏக்கர் மணல் நிலத்தை கடந்த ஆறு ஆண்டுகளாக ஆழமாக உழுது பண்படுத்தி வருகின்றனர். பெர்லினுக்கு வடக்கேயுள்ள மணல் நிலம் தான் நவீன முறையில் இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படுகிறது.

ஆழமாக உழுவதாலும் இரசாயன பசளையை உபயோகிப்பதாலும் மணல் காடு அபிவிருத்தி செய்யப்படுவதோடு, அந்த நிலத்தில் மாசூலும் 20 சத வீதம் அதிகரித்துள்ளது.

### கதிர்வீச்சு குளிர் சாதனம்

உணவை பலமாத காலங்ளுக்கு பழுதடையாமல்பாதுகாத்து வைக்க கதிர்வீச்சு மூலம்பழுதடையாமல்வைப்பதற்கு புதிய சாதனம் ஒன்றுகண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இறைச்சி, காய்கறிகள் மற்றும் உணவு வகைகளை பிளாஸ்டிக் பை ஒன்றுக்குள் வைத்து, 'காமா" கதிரைப்பாய்ச்சி காற்றை வெளியெடுத்து அவற்றைப் பழுதடையாமல் வைத்திருக்க முடியும் எனப் பரிசோதனைகள்மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது.

முழுவதும் பிளாஸ்டிக்கினுல் செய்யப்பட்ட 'பாடி' யையுடைய கார் இப்பொழுது உற்பத்தி செய்யப்படுகின்றது. இது சாதாரணமான உலோக 'பாடி'களுடைய கார்களை விட பாரம் குறைந்தனவாகவும், அதே நேரத்தில் நீண்ட காலம் பாவிக்கக்கூடியதுமாக இருக்கின்றன. ஆச்சரியப்படாதீர்கள்! மிகவிரைவில் செயற்கைப் பொருட்களால் (Synthefic Materials) காரின் 'பாடி'யை செய்யவும் கார் உற்பத்தியாளர் உத்தேசித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## கொக்குவில் இந்துக்கல்லூரி விளையாட்டுப்போட்டி முடிவுகள்

கோண்டாவில், திங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி இல்லங்களுக்கான வருடாந்த விளையாட்டுப்போட்டி நேற்று கல்லூரி அதிபர் திரு சி. கே. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு ரி. தளையசிங்கம் கலந்துகொண்டார். இப்போட்டியில் சபாபதி இல்லம் 182 புள்ளிகளையும், நாகலிங்கம் இல்லம் 162 புள்ளிகளையும், கார்த்திகேசு இல்லம் 161 1/2 புள்ளிகளையும், செல்லையா இல்லம் 150 புள்ளிகளையும் சபாரட்ணம் இல்லம் 79 1/2 புள்ளிகளையும் பெற்றது. போட்டியின் சில முடிவுகள் வருமாறு:-

1500 மீற்றர் மேற்பிரிவு ஆண்கள் எஸ். குகனேந்திரன், பி பாக்கியராசா, என் சிறீபாலன் 200 மீற்றர் (மேற்பிரிவு) தளையசிங்கம், தேவமனோகரராஜா. குமாரலிங்கம்.

(மத்திய பிரிவு) ஜெயராஜசிங்கம், பவானந்தன், சச்சிதானந்தன். (பெண்கள்) (மேற்பிரிவு) வசந்தகோகிலம், செம்மனச்செல்வி. ரமணேஸ்வரி,

150மீற்றர் (மத்தியபிரிவு) பெண்கள், ரி. இந்திராணி, கே கமலாதேவி, ஆர் செல்வராணி, 100 மீற்றர் (அதிமேற்பிரிவு) பெண்கள்: கிருபாநிதி, பரமநாதவல்லி, சரோஜினி, 800 மீற்றர் (அதிமேற்பிரிவு) ஆண்கள்: இரத்தினசிங்கம், ராஜகுலேந்திரன், யோகேஸ்வரன்.

சமநிலை ஓட்டம் (மேற்பிரிவு) பெண்கள்: ஜசோதா ஜெயந்தி, பரிவட்டம் எறிதல் (மேற்பிரிவு) வைத்தீஸ்வரன், பாலசுந்தரம், சுந்தரநந்தா, ஈட்டி எறிதல (மத்தியபிரிவு) ஜெயராசா, ராஜகுலசிங்கம் பவானந்தன், (மேற்பிரிவு) எஸ் சம்பத்குமார், ஏ மகேந்திரன், தெய்வேந்திரன், பரிதிவட்டம் எறிதல்:(மத்தியபிரிவு) பெண்கள்: வசந்தாதேவி, மாலதி, ரசிதாதேவி, சமநில ஓட்டம்; சரஸ்வதி, மனோகரி, வசந்தகோகிலம், மங்கையர்க்கரசி.

அணிவகுப்பு: செல்லையா இல்லம், கார்த்திகேசு இல்லம், சபாரத்தின இல்லம்.

போட்டியில் வெற்றிபெற்றோர்க்கு திரு ரி. தளையசிங்கம் பரிசில்களை வழங்கினார். இவ்வருட சாம்பியன் கேடயத்தை சபாபதி இல்லம் சுவீகரித்துக்கொண்டது.

## சைவமகாஜனவுக்கு முதலிடம்
### உடுவில் வட்டார பாடசாலைகள் விளையாட்டுப்போட்டி முடிவுகள்

கோண்டாவில், திங்கள் உடுவில் வட்டாரப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் திரு. வி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது உடுவில் வட்டார வித்தியாதரிசி திரு. ஆ. சிவகுரு பரிசில்கள் வழங்கினார். இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை 117 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை சுவீகரித்துக்கொண்டது சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை 42 புள்ளிகளையும் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை, சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை 36 புள்ளிகளையும் பெற்றது. வெற்றிபெற்ற பாடசாலைகளின் பெயரும் பெறுபேறுகளும்பின் வருமாறு:

100 மீற்றர்

மேற்பிரிவு: க மகாலிங்கம், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை. இ சின்னராசா, இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை. ஐ மனோகரன், இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை.

200 மீற்றர்

மேற்பிரிவு. க மகாலிங்கம், ஆ பா வி, ஐ செல்வராசா, சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை. ஐ. மனோகரன், இ சை வி.

400 மீற்றர்

ஐ செல்வராசா, சு தி வி, தி சிவபாதம், ஆ பா வி. இ நாகேஸ்வரன், இ சை ம வி.

800 மீற்றர்

சி தர்மகுலசிங்கம், சுன்னாகம் மயிலிணி வித்தியாசாலை. வி செல்லத்தம்பி, சு. ம வி. இ கதிரவேல் முதலித்தம்பி, இ சை ம வி.

1500 மீற்றர்

கதிரவேல் முதலித்தம்பி இ சை மா வி. க யோகேந்திரன், இ சை வி. சி சோதிநாதன், இ சை வி.

குண்டெறிதல்

இ சின்னராசா, இ சை ம வி. ச யோகேந்திரன், இ சை வி. ச சண்முகநாதன். இ சை ம வி.

பரிதிவட்டம்

இ சின்னராசா, இ சை ம வி. ச கனகநாதன், இ சை ம வி.

100 மீற்றர்

மத்தியபிரிவு: இ அரியரத்தினம், க பற்குணலிங்கம், க பரமேஸ்வரன்.

200 மீற்றர்

இ அரியரத்தினம், ம அந்தோனிப்பிள்ளை, க பற்குணலிங்கம். 4 X 200 இணுவில் சைவமகாஜனா, ஆனைக்கோட்டை றோ க, தாவடி இந்து தமிழ். 4 X 100 இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை, தவடி இந்து, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலை.

100 மீற்றர் மேற்பிரிவ: பெண்கள்: சி விசயா[illegible] ந லீலாதேவி, வி [illegible]வரி. 200 மீற்றர் பெ[illegible]

(2-ம் பக்கம் பார்க்க)

## ரூபாய் . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நாணய மதிப்பைத் தவிர்ப்பதற்கு அனைத்துலக நிதிநிறுவனத்தை அமைத்த பிரெட்டன் வுட்ஸ் சட்டத்தின் ஷரத்துகளில் ஒன்று போட்டி போடும் வகையில் நாணய மதிப்பைக் குறைப்பதில்லை எனக் கையெழுத்திட்டுள்ள நாடுகளுக்கு வாக்களித்திருக்கிறது. இந்தியா ரூபாமதிப்பைக் குறைத்திருந்தும், இதங்கை சிலபெரிய, ஏற்றுமதிப் பொருட்களில் இந்தியாவுடன் போட்டியிட்டபோதிலும் அரசாங்கம் செலாவணி மதிப்பைக் குறைப்பதில்லைஎன்றுசெய்த முடிவுக்கு இதுவே காரணமாக இருந்திருக்கவேண்டும்.

உடுப்பிட்டி வட்டார

## தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுப் போட்டி

உடுப்பிட்டி, திங்கள் உடுப்பிட்டி வட்டாரத் தமிழ்ப்பாடசாலைகளின் மெய்வல்லுநர்விளையாட்டுப் போட்டி வடபிரதேச வித்தியாதரிசி திரு ஏ சி ஞானசேகரம் தலைமையில் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இடபோட்டிகளில் பதினொருதமிழ்பாடசாலைகள் பங்குபற்றின. சில போட்டி முடிவுகள் வருமாறு:

மேற்பிரிவு: (200 மீட்டர் ஓட்டம்) வீ குணசிங்கம், செ தங்கராசா, சி மகாலிங்கம்; (400 மீட்டர்) இ விக்னேஸ்வரமூர்த்தி, தா நடராசா, வ பாலசிங்கம்; (நீளம் பாய்தல்) குணசிங்கம், சி இரத்தினம், சி யோகராசா, (200 மீட்டர் பெண்) ந கமலாதேவி, ந கனகம்மா, க பற்றிமாவதி இராசேஸ்வரி, (800 மீட்)வ பரராசசிங்கம், வீ பாலசிங்கம், பொ நடராசா, (உயரம் பாய்தல்) வீ லோகேஸ்வரன், செ மார்க்கண்டு, சி மகாலிங்கம், (குண்டெறிதல்) க இராசேஸ்வரன், வெ பாலசுப்பிரமணியம், வ பாலசிங்கம் (அஞ்சலோட்டம்) 4X100 மீற்றர், கரணவாய் பொன்னம்பலவித்தியாசாலை, புற்றளை வித்தியாலயம், புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, 4X220 மீற்) யார்க்கரு விநாயகர்வித்தியாலயம்.

(மத்தியபிரிவு) நீளம் பாய்தல்: கி கிருஷ்ணன், ம குமரசக்கரப்பிள்ளை, கி சிவஞானம் 150 மீற் ஓட்டம் பெண்) ந அருந்தவநாயகி, வி அஞ்சலிதேவி, ப செல்வரட்ணம் (உயரம் பாய்தல்) கி சிவப்பிரகாசம், சி சிவஞானம், நா தனபாலசிங்கம், இ தேவராசா (குண்டெறிதல்) சி செல்வராசா, சி கிருஷ்ணன்.

(அஞ்சலோட்டம் 4X100 மீற்) பெண்: வதிரி தெற்கு ஆர் சி பாடசாலை, கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம், வல்வெட்டி எச் பி ஈ பாடசாலை

கீழ்ப்பிரிவு (நீளம் பாய்தல்) ந தங்கத்துரை, க அமுதலிங்கம், (80 மீற்றர் ஓட்டம்) த இராசேஸ்வரி, சி சரஸ்வதி, க பற்றிமாவதி, இராசேஸ்வரி, (உயரம் பாய்தல்) ந தவராசா, க அமுதலிங்கம், சு மனோகரன், (அஞ்சலோட்டம் 4X100 மீற்றர் பெண்) வதிரி தெற்கு றோ. க. புற்றளை வித்தியாலயம், யாக்கரு விநாயகர் வித்தியாலயம், 100 மீட்டர் ஓட்டம் மே பி க பாலராணி, ந கமலாதேவி, ஆ சீதாதேவி, (100 மீற்றர் கீ பி) ந இராசேஸ்வரி, அ இ அமுதமலர் சி சரஸ்வதி, (100 மீற்றர் ம பி) சிசிவப்பிரகாசம், இ தேவராசா, செ கனகரத்தினம், (பார்வையாளர்களுக்கான ஒரு மைல் ஓட்டம்) ரி மயில்வாகனம், எஸ் சுப்பிரமணியம், கே சிவகுரு.

இப்போட்டிகளில் யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் முதலிடத்தையும், கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம் இரண்டாமிடத்தையும் பெற்றன. 500க்கு மேற்பட்ட மாணவ மாணவிகளின் அணிவகுப்பை உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம், வடபிரதேச வித்தியாதரிசி, உடுப்பிட்டிப்பகுதி வித்தியாதரிசி ஆகியோர் பார்வையிட்டனர்.

## திருவள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், செவ். அல்லைப்பிட்டி வாகீசரி சனசமூக நிலையத்தினர் நாளை புதன்கிழமை திருவள்ளுவர்விழாவை கொண்டாட இருக்கின்றனர்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற இருக்கும் இவ்விழாவில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திரு. க சி. குலரத்தினம், திரு. ச. சிவப்பிரகாசம் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள். கவிஞர் இ. நாகராஜன் கவிஞர் தில்லைச்சிவன் ஆகியோர் பாமாலை சாற்றுவர். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## மன்னர் இந்துக்கல்லூரி விளையாட்டுப்போட்டி முடிவுகள்

மன்னார் திங்கள் மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டிகள் புதன்கிழமை நடைபெறும்.

மன்னார் எம் பி திரு வி ஏ அழகக்கோன் கொடியேற்றி வைக்க அரசாங்க அதிபர் திரு டி நேசையா ஒலிம்பிக் விளக்கேற்றி போட்டியை ஆரம்பித்து வைப்பார்.

வெற்றிபெறுபவர்களுக்கு வித்தியாதிகாரி திருமதி ஆர் எஸ். பாமர் பரிசுகளை வழங்குவார்.


கூரை வேயும் செலவில்
20% சேமிக்க
புதிய புரட்சிகரமான
இலகு பார



லயனேட் எல். டபிள்யூ.
பொப்பியூலர் சிக்ஸ்
அஸ்பெஸ்டோஸ்
கொறுகேட்டெட் ஷீட்டுகளை
உபயோகியுங்கள்

★ வேறெந்தக் கூரை வேயும் சாதனத்தையும் விட விலைகுறைந்தது.

★ கூரை வேயும் செலவில் 20% சேமித்து, உங்கள் தேசத்தின் வெளிநாட்டுச் செலாவணியை மீதப்படுத்த உதவுங்கள்.

★ உறுதியானது. வசைந்து கொடுப்பது. மிருதுவானது. எந்தக் கால நிலையிலும் குளுமையோடு இருப்பது.

இன்று கிடைக்கும் கூரைவேய் சாதனங்களில் சிக்கனமும் அதிபாவனை வன்மையும் வாய்ந்த லயனேட் எல். டபிள்யூ. என்று வற்புறுத்தி வாங்குங்கள்.

எமது மற்றொரு மதிப்பு வாய்ந்த உற்பத்திப் பொருள்.

ஸ்ரீ லங்கா அஸ்பெஸ்டோஸ் புருடக்ஸ் லிமிட்.,
[illegible] டவன வீதி, கொழும்பு-14.

GRANTS 16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜவுளிக்கு பதில் தடியடிவாங்கினர்

## புறக்கோட்டையில் சம்பவம்

கொழும்பு, ஞாயிறு
இன்று புறக்கோட்டையில் கட்டுக்கடங்காத ஜனங்களின் மீது தடியடிப் பிரயோகம் செய்ய நேர்ந்தது.

ஜவுளிக்கடைகளில் மணிப்புரி சாறிகள் கூப்பனுக்கு விற்கப்படுகின்றனவென்று அறிந்த பொதுமக்கள் கடைகளின் முன்கூட்டமாகக் கூடி இருந்தார்கள். 'கியு' வரிசைகளை ஏற்படுத்த பொலிசார் முயன்றபோது பலர் வரிசைகளை முறித்துக் கொண்டு முன்னால் செல்ல முயன்றபோது பெரும் நெருக்கடி ஏற்பட்டது. கட்டுப்படுத்துவதற்காகப் பொலிசார் குறுந்தடிப்பிரயோகம் செய்தனர். முண்டியடித்துக்கொண்டு இடைஞ்சல் புரிந்தவர்களைப் பொலிசார் 'பெல்டு'களாலும் தாக்கநேரிட்டது.

# மேலும் இரு சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கின

## தொழிலாளர் கழகம் வாபஸ்!

கொழும்பு, ஞாயிறு
தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 17-50 கொடுக்க வேண்டுமெனஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் நடாத்திவரும் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாக லங்கா சமசமாஜக் கட்சியின் ஆதிக்கத்திலிருந்து வரும் லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கமும் கம்யூனிஸ்ட் (மாஸ்கோ) கட்சியின் ஆதிக்கத்திலிருந்து வரும் ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் வேலை நிறுத்தத்தில் இன்று இறங்கின.!

இந்தச் சங்கங்களும் சேர்ந்து கொண்டதைத் தொடர்ந்து இப்போது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தோட்டத் தொழிலாளர் தொகை ஒரு லட்சம் எனத் தெரிய வருகிறது.

ஆனால் இலங்கைத் தோட்டத் முதலாளிமார் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையொன்று, ஐம்பதினாயிரம் பேர்தான் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாக கூறுகிறது.

தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் இயங்கும் இலங்கை தொழிலாளர் கழகம் வேலை நிறுத்தத்திலிருந்து இன்று வாபஸ் பெற்றுக் கொண்டுள்ளது. இந்த வேலை நிறுத்தத்தில் கூட்டாட்சி கட்சிகளைச் சேர்ந்த சங்கங்கள் இறங்கியுள்ளதால் இது அரசியல் பிரச்சினையாக மாறிவிடுமென்று கருதியதைத் தொடர்ந்தே இலங்கை தொழிலாளர் கழகம் வேலை நிறுத்தத்திலிருந்து வாபஸ் பெற்றுள்ளதாகக் கருதப்படுகின்றது.

# "புதிய கல்விக்கொள்கை பல சீர்திருத்தங்களை கொண்டிருக்கும்"

## வடமாநில உதவி வித்தியாதிபதி கருத்து

மாவிட்டபுரம், ஞாயிறு
"எங்கள் சமுதாயத்தில் கல்வி கற்றபின்னர் எவ்வித முயற்சியிலும் ஈடுபடாமலிருக்கும் இளைஞர்களும் இருக்கிறார்கள். அபிவிருத்தி அடைந்துவரும் ஒரு நாட்டின் எதிர் காலத்துக்கு இது நல்ல அறிகுறியன்று. ஆகவே தான் கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டியிருக்கின்றது. ஒவ்வொரு பிள்ளையும் தன்னுடைய திறமை, நாட்டம், ஆர்வம் ஆகியவைகளுக்கு ஏற்ப கல்வியைப் பெறல் இன்றியமையாதது"

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நிறுவியவர் தினமும் பரிசளிப்பு விழாவும் நேற்று நடைபெற்ற பொழுது பரிசளிப்பு பேருரை நிகழ்த்திய வடமாநில உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. தணிகாசலம் தொடர்ந்து கூறியதாவது:

"பாடசாலையில் பல்கலைக் கழக புகுமுக வகுப்பில் படித்து தேர்ச்சி பெற்றவர்களைத் தவிர ஏனையோர் வாழ்க்கையில் எந்தவிதமான நோக்கும் இலக்கும் இன்றி ஏமாற்றத்துடன் வெளியெறுகின்றனர். இந்தச் சூழ் நிலையிலேதான் கல்வியமைச்சர் தெரிவித்துள்ள கல்விச் சீர்திருத்தத்தை வரவேற்க வேண்டியதாகவிருக்கின்றது. இப்போதைய கல்வி வெறும் புத்தகப் படிப்பாகவேயமைந்துள்ளது. இதற்கும் வாழ்க்கையில் ஏற்படப் போகின்ற உண்மையான நிலைக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. பெரும்பான்மையான மாணவர்களுக்கு இந்தக் கல்வி உகந்ததாக அமையவில்லை. இதன் காரணமாகவே பொதுக் கல்வி தொழில்நுட்பக்கல்வி, உயர்தரக் கல்வி ஆகியவை பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

தாய்மொழி மூலம் நிகழுகின்ற கல்விக்கு முதன்மை கொடுக்கின்ற காலம் இது அத்துடன் ஆங்கிலத்தில் மாணவர்கள் கவனம்கொடுக்க வேண்டுமென கல்விச் சிந்தனையாளர்கள் கூறுகின்றனர். இக்கால சம்பவங்களையும் போக்குகளையும்நன்கு அறிதற்கு ஆங்கிலம் உதவும். ஆங்கில அறிவு இல்லாவிட்டால் மாணவராகிய உங்களின் முன்னேற்றம் தடைப்படும்.

சமயப்பற்றுள்ள கல்வியின் முக்கியத்துவம் சைவ சமயத்தில் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது. இந்த உண்மையையே "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்ற பொன்வாக்கு வற்புறுத்துகின்றது.

கல்லூரி நிறுவியவர்தினப் பேருரை நிகழ்த்திய அரச கருமமொழித் திணைக்களச் சுப்பிரீண்டன் பிரதமூரீ கே. லட்சுமணன் தமது பேச்சில் குறிப்பிட்டதாவது:

'தனிப்பட்டவர்களுடைய கல்வி முயற்சிக்கு பெரும் மதிப்புக்கொடுப்பவன் நான். தனிப்பட்ட ஒருவரினாலே நிலைநாட்டக்கூடிய சாதனைக்கு இக்கல்லூரி சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். ஆற்றலுடன் பண்பைப்பரப்ப ஆசிரியர் மட்டும்முயன்றால்போதாது. மாணவரின் நற்பண்பை வளர்க்க பெற்றோரும் சுழலும் நாடும் முன்வருதல் அத்தியாவசியம்.

திருமதி தணியாசலம் பரிசுபெற்றவர்களுக்கு பரிசில் வழங்கினார். செல்வி ஆர் இராசநாயகம் வரவேற்புரை நிகழ்த்தினார். இலங்கைப்பல்கலைக்கழக உதவி விரிவுரையாளரும் கல்லூரி பழைய மாணவருமாகிய திரு. ஒ. இன்னத்தம்பி நன்றிகூறினார்.

இன்னும் சில ஆண்டுகள்

# ஆங்கிலம் போதன மொழியாக இருக்கும் சிறுபான்மையோர் கோரிக்கை: கல்விஅமைச்சு ஆலோசனை

கொழும்பு, ஞாயிறு
ஆங்கில மொழியைத் தொடர்ந்து மேலும் சில வருடங்களுக்கு ஆரம்ப வகுப்புகளில் போதனமொழியாக வைத்திருப்பது குறித்து கல்வி அமைச்சு ஆலோசித்து வருகின்றது.

அடுத்த ஆண்டு முதல் ஆங்கிலத்தைப் போதனமொழி நிலையிலிருந்து நீக்குவதற்கு கல்வி அமைச்சு முன்னர் செய்திருந்த முடிவு மாற்றப்படுமானால், ஆங்கிலத்தை வீட்டுமொழியாகக் கொண்டுள்ள பெற்றோர்கள் ஆறுதல் அடைவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

ஆரம்பவகுப்புக்களில் ஆங்கிலம் போதனமொழியாக இருப்பதை அடுத்த ஆண்டுதொடக்கம் நீக்கிவிடுவது என்று முன்னர் கல்வி மந்திரி முடிவு செய்திருந்தார். இந்தமுடிவை புனராலோசனைசெய்யும்படி சிறுபான்மை மக்கள்கோரி வந்தார்கள். கல்விமந்திரியின் புதிய கல்வி மசோதாவில் அடுத்த ஆண்டுதொடக்கம் ஆங்கில வகுப்புகளுக்கு புள்ளிகளைப் புதிதாகச் சேர்ப்பதை நிறுத்துவதற்கு வகைசெய்திருந்ததை ரத்து செய்யும்படி சிறுபான்மை மக்களின் 12 பிரதிநித்துவ ஸ்தாபனங்கள் சமீபத்தில் மகஜர் ஒன்றை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்திருந்தன இந்த வேண்டுகோள்களைத் தொடர்ந்தேகல்விஅமைச்சு இப்போது ஆங்கிலத்தை மேலும் சில ஆண்டுகளுக்கு போதனமொழியாக வைத்திருப்பதற்கு ஆலோசிப்பதாகத்தெரிகின்றது.

ஆங்கிலமொழியைத் தொடர்ந்துபோதனமொழியாக வைத்திருப்பதற்கான ஒருதிட்டத்தை அரசாங்கம் இப்போது பரிசீலனைசெய்து வருகின்றது. இந்தத்திட்டத்தின்படி ஆங்கிலம் போதனமொழியென்ற நிலையிலிருந்து எப்போது நீக்கப்படும் என்பது பற்றி திட்டவட்டமாக முன்கூட்டியே அறிவிக்கப்படும் என்று தெரிகிறது.

# "செலாவணியை மிச்சப்படுத்தலாம்"

வவனியா, ஞாயிறு
"உணவு உற்பத்தியில் கவனம் செலுத்தினால் தான் நாடு பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடையும். எமக்குத் தேவையானவற்றை நாமே உற்பத்தி செய்தால் வெளிநாடுகளை நாம் நமது உணவுக்காக எதிர்பார்க்கத் தேவையில்லை. இதனால் வெளிநாட்டு செலாவணியையும் மிச்சப்படுத்தலாம்.

வவனியா அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற சேமிப்பு சங்க வருடாந்த கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய வவனியா அரசாங்க அதிபர் திரு. டி. எம். பி. வி. திஸநாயக்கா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

புதுவருட உத்தியோகத்தர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்; வவனியா அரசாங்க அதிபர் திரு திஸநாயக்கா, உபதலைவர்கள்: திரு டபிள்யு சமரக்கோன், திரு ரி கே திஸநாயக்கா, காரியதரிசி: திரு எஸ் கனேஷ், பொருளாளர்: திரு எஸ் இரகுநாதபிள்ளை மூவர் அடங்கிய நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது

# பஞ்சாயத்தினர் தெரிவு

சங்கானை; ஞாயிறு
யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின்கீழ் நிர்வாகிக்கப்பட்டுவந்த சங்கானை சிவன் கோயில்நேற்று தொடக்கம் ஓர் பஞ்சாயத்தின்கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சைவபரிபாலன சபையின் பிரதிநிதி திரு. மு மயில்வாகனம் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில், கோயிலில் நடைபெற வேண்டிய திருத்தங்கள் பற்றியும் ஊர்பொதுமக்கள் கோயிலின் முன்னேற்றத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய பங்குபற்றியும் குறிப்பிட்டு கோயிலை பஞ்சாயத்முறையில் நடாத்துவது சிறந்தது என்றார்.

இக்கருத்தை ஏற்றுக் கொண்ட சபையினர் பின் வருவோரை பஞ்சாயத்தினராக தெரிவு செய்தனர்: தலைவர்: திரு சோ. சிவஞானம், உபதலைவர்: திரு. செ. சீவரெத்தினம், காரியதரிசி: பண்டிதர் சி. வேலுப்பிள்ளை, தனாதிகாரி திரு. ப. இ. தேவராசா, உறுப்பினர்: திரு. இ. க. திருச்செல்வம்.

சிறுவன் கொலை:

# கிரிம்பகந்த விசாரிக்கப்பட்டார்

கொழும்பு, திங்கள்
தெஹிவளையில் கோதபயா என்ற சிறுவன் கொலையுண்டது சம்பந்தமாக இன்று அப்பையனின் வளர்ப்புத் தந்தையான கிரிம்பகந்த என்பவரை இரகசியப் பொலிஸார் விசாரணை செய்தனர்.

கிரிம்பகந்த கைதுசெய்யப்படக்கூடுமென்று கருதப்படுகின்றது.

# சாரணர் போட்டி

## யாழ். இந்துக்கல்லூரிக்கு முதல் இடம்

யாழ்ப்பாணம், திங்.
யாழ்ப்பாண நகர வட்டாரங்களிலுள்ள கல்லூரிகளின் சாரணர் போட்டி கடந்த மூன்று நாட்களாக கிளிநொச்சியில் நடைபெற்றது. நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதலிடத்தைப் பெற்றது இரண்டாவது இடத்தை கொக்குவில் இந்துக்கல்லூரியும், மூன்றும் இடத்தை யாழ். மத்திய கல்லூரியும் பெற்றுக்கொண்டன. காட்டுப்பகுதியில் சாரணர்கள் எவ்விதம்பாசறை அமைத்து மரங்களில் வீடுகள், பாலங்கள் அமைக்கவேண்டும் என்பதைப்பற்றியே இப் போட்டிகள் அமைந்திருந்தன.

கொக்குவில்

# இந்துக் கல்லூரி விளையாட்டுப் போட்டி

கொக்குவில், ஞாயிறு
"இளம் வயதிலே ஏற்படும் வெற்றி தோல்விஎதிர்காலத்தில் ஒருவனுக்குஎதையும் தாங்கும் இதயத்தை அளிக்கிறது. வெற்றியையும், தோல்வியையும் ஒரே மாதிரியே ஏற்றுக் கொள்ளப் பழக வேண்டும். தோல்விக்காக என்றும் மனம் தளரக் கூடாது; வெற்றியின் முதல் படிதான் அது!"

கொக்குவில் இந்துக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று மாலை நடைபெற்றபோது, பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ரி. தளையசிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

கல்லூரி அதிபர் திரு. சி. கந்தசாமி பேசுகையில், இந்தப் பாடசாலையின் வளர்ச்சி இக்கிராமத்து மக்கள் பழைய மாணவர் ஆகியோர் கையிலேயே இருக்கிறதென்றும்.

வெற்றி பெற்ற மாணவமாணவிகளுக்கு திரு. ரி. தளையசிங்கம் பரிசில்கள் வழங்கினார்.

போட்டியில் கலந்து கொண்ட இல்லங்களும், அவை எடுத்த புள்ளிகளும் வருமாறு:

சபாபதி இல்லம் (182), நாகலிங்கம் இல்லம் (162), கார்த்திகேசு இல்லம் (161), செல்லையா இல்லம் (150), சபாரத்தினம் இல்லம் (79)

# பாராட்டுக்கூட்டம்

உடுப்பிட்டி, ஞாயிறு
உடுப்பிட்டி எம் பி திரு மு சிவசிதம்பரம் அமெரிக்கா செல்வதையிட்டு துன்னாலை தெற்கு கிமு சங்கம் வரணி மகாவித்தியாலயத்தில் அதிபர் திரு வி தங்கராசா தலைமையில் தேநீர் விருந்தளித்து கௌரவித்தது வித்துவான் பொ நடராசா, திரு எம் சத்தியமூர்த்தி, திரு சி தர்மலிங்கம், திரு வி கே ஆறுமுகம், திரு எஸ் வல்லிபுரம், திரு என் வெற்றிவேலு ஆகியோர் பாராட்டிப் பேசினர் நாடக ஆசிரியர் திரு மன்னவன்கந்தப்பு பிரிவுபசார மடலை வாசித்தளித்தார்

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 2-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org